Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதாநியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மக்ஞாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கில௴
15-உயில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 3. } 1912௵ ஜூலை௴ 15௳ / பரிதாபி௵ ஆடி௴ 1௳ { பகுதி 3.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.
## (CONTENTS.)

1. மஹாத்மாக்களும், அவர்களையடையும் மார்க்கமும்—ப. நா. ௬௭
Masters and How to reach them—By P. Narayana Iyer.

2. ஆகாசகமநமும் அகண்டாகார விர்த்தியும்—சிவராமசுப்பிரமணியன். ௭௮
Air-navigation and Cosmic Consciousness. By Sivaramasubramanya.

3. ஸ்ரீ சடகோபர் வைபவம்—மு. இராகவன். ௮௨
The Greatness of the saint, Sri Satakopa. By M. Raghaviengar.

4. உதயதிசை நக்ஷத்திரத்தின் சங்கம்—ப. நாராயணன். ௯0
The Order of the Rising Star in the East. By P. Narayana Iyer.

5. நாம் தூங்குவானேன்?—ப. நா. ௯௨
Why do we sleep?—By P. Narayana Iyer.

6. புத்தக வரவு—பத்திராதிபர். ௯௫
Review of Books—Editor.

7. சமாசாரம்—பத்திராதிபர். ௯௭
News—Editor.

8. பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்
Patanjala Yoga Sutra.

## விளம்பரம்.

அதிக உன்னதமான உறுதியுள்ள கீர்த்திவகித்த கைக்கெடியாரங்கள், பெரிய கெடியாரங்கள், நம்பிக்கையுள்ள மருந்து, எலக்டிரிக் பொன், ஜெர்மன்சில்வர், இமிடேஷன் இரவை கெம்புகற்களாற் செய்த ஆபரணங்கள், புத்தகங்கள், சகுந்தலா கூந்தல் வளரும் பரிமளத் தைலம், அத்தர், போடோகிராப் படங்கள் இன்னும் அநேக சாமான்கள் அடங்கியதுமான கேட்லாக் தங்களுடைய அட்ரஸ் தெரிவிப்போர்களுக்கு ஒரு கேட்லாக்கு இனமாக அனுப்பப்படும். எம்முடைய கேட்லாக்கில் விலைகள் நிரம்பவும் நயம்.

**T. M.** கலியாணசுந்தர முதலியார்,
போடோகிராபர், 32-33, நாகப்பையர் தெரு,
திருவட்டீஸ்வரன் பேட்டை,
மவுண்ரோட், சென்னை.

## ADVERTISEMENT.

## அறிவிப்பு.

### உயர்ந்த புத்தகங்கள்! குறைந்தவிலை!

உபநிஷத் அர்த்ததீபிகை என்னும் பெயரால் பிரசித்தம் செய்யப்பெற்ற உபநிஷத்துக்களும், சூத்திரார்த்ததீபிகை என்னும் பெயரால் வெளிவந்த ஸ்ரீவேதாந்தசூத்ரபாஷ்யம் 9 பாகங்களும், அடியிற்கண்ட குறைந்த விலைக்குச் சொற்பகாலம் விற்கப்படும். வேண்டியவர்கள் தஞ்சாவூரில் கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்தும், சென்னை தம்புசெட்டித் தெரு ரிப்பன்பிரஸ்ஸிலிருந்தும், அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

### புத்தகங்களின் விவரம்.

இவைகளில் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ்பாஷ்யங்களும் குறிப்புரைகளும் அடங்கியிருக்கின்றன.

| | முன்விலை. | இப்போதியவிலை. |
|---|---|---|
| | ரூ அ ப | ரூ அ ப |
| ஈசோபநிஷத் | 1—8—0 | 0—8—0 |
| கேநோபநிஷத் | 1—12—0 | 0—10—0 |
| கடம் | 4—0—0 | 1—8—0 |
| முண்டகம் | 2—8—0 | 1—0—0 |
| மாண்டூக்யம் கவுடபாதர் அவர்களுடைய காரிகையுடன் தமிழில் | 3—8—0 | 1—8—0 |
| தைத்திரீயம் | 6—0—0 | 2—0—0 |
| சூத்ரார்த்ததீபிகை 9ஸஞ்சிகை | 6—12—0 | 2—4—0 |

தபால்சார்ஜ் பிரத்யேகம்.

அ. சிவராவ்.
ரிடைர்டு டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்ட்ரார்,
61 நிர். கச்சேரி ரோட்,
மைலாப்பூர்.

## NOTICE.

A Theosophical Book Depot has been opened at the *Hall of Theosophy*, *Madura* for sale of English and Tamil Theosophical books which are sold very cheap.

V. VENCUSAMI AIYAR,
Manager.
Theosophical Book Depot, Madura.

## புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்,

| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வம்சாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| சுவேதாசுவதரோபநிஷத் ஷை | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ஷை | 0-2-0 |
| மௌநவாக்கு | 0-2-0 |
| சந்மார்க்கதீபம் | 0-2-0 |
| ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-1-0 |
| அந்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| டில்லிதர்பபர் மஹோத்ஸவம் | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின்சங்கமும்அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம் | 0-0-6 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| சிராத்தம் | 0-0-3 |
| சந்மார்க்க சபையை நடத்தும் முறை | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரஹ்மஞாந சபை | 0-0-1 |
| தசாவதாரங்களின் உண்மை | 0-0-3 |
| மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும் | 0-0-3 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற் கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி பிரெஸிடெண்டு ப. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# பூர்ணசந்திரோதயம்.

| | | |
|---|---|---|
| தொகுதி 3. | 1912ஹு ஜூலைமீ 15உ<br>பரிதாபிஹு ஆடிமீ 1உ | பகுதி 3. |


## மஹாத்மாக்களும், அவர்களையடையும் மார்க்கமும்.

(38-ம் பக்கத் தொடர்ச்சி).

அடியில்வரும் கைவல்லிய உபநிஷத் வாக்கியம் இங்கு கவனிக்கத்தக்கது :—

"த்யாகேநைகே அம்ருதத்வமாநசு:" தியாகத்தலன்றி வேறுவிதமாய் மரணமற்ற நிலையைப்பெறுதல் இயலாது.

இதன்மேல் மற்றப்படிகளையும் நான் தெரிவிக்கின்றேன். இவைகள் சிஷனிடம் அமையும் பக்ஷத்தில், முதல் தீக்ஷை பெறுதலுக்கு அருகனுவன். இதன் நான்கு சாதநங்களாவன:—முதலாவது நித்யாநித்யவஸ்து விவேசநம். அதாவது, நித்தியமாயுள்ளது இன்னது என்றும், அழியக்கூடியது இன்னதென்றும், ஸத் இஃதென்றும், அஸத் இஃதென்றும், உயர்நலமுள்ளது இன்னதென்றும், நலமில்லாதது இன்னதென்றும், பரத்தை அடைதலுக்கு அநுகூலமானது இன்னதென்றும், இகத்திற்கு அநுகூலமானது இன்னதென்றும், நிகம் நிகம் நீ செய்யும் ஒவ்வொரு காரியத்திலும், நினைக்கும் ஒவ்வொரு சிந்தனையிலும், ஆராய்ந்து வேறுபடுத்திக் கொள்ளல்வேண்டும். பொய்யைத் தள்ளி மெய்யைத் தழுவு.

உலக கீர்த்தி, உலக சம்பத்து, உலகச் செல்வாக்கு இவைகளெல்லாம் ஒரு நிமிஷத்தில் நசிக்கும் தன்மையனவல்லவா? அவைகளைத் துறந்து சீலம் உன்னிடம் அமையும்படி செய்துகொள். புறச்சம்பத்தில் அவாக்கொள்ளாதே, அகச்சம்பத்தில் அவாக்கொள்ளு. பொய்யான உன் சுற்றத்தில் மநம் வைக்காதே; அவை தகர்ந்துபோம். நீ சந்திக்கும் ஸ்திரீ புருஷர்களிடம் இருக்கின்ற ஆத்ம சம்பத்தை மாத்திரம் கவனி. அவர்கள் குற்றம், குறை, கோபம், அகங்காரம், பிழை, அறிவீனம் இவைகளால் சாதாரணமாய் பாதிக்கப்பட்டிருப்பார்கள். அவைகள் ஆத்ம சம்பத்துக்குப் புறம்பானவைகள் என்று மதி. நீ பார்க்கிற ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஈசுவரன் ஸந்நிதானத்தைப்பார். அது இருக்கும் களேபரத்தைக் கவனியாதே. முத்தைக் கவனி. அது இருக்கும் நாற்றமுள்ள புலாலைக் கவனியாதே. ஒவ்வொரு மனிதனிடத்துமுள்ள ஆத்மதேஜஸ்ஸை உணர்ந்து, அவனுடன் ஒருமைப்பட்டு அவனுக்கு உன்னால் கூடும் உதவியைப் புரிய முயல்வாயாக. அவனிடமுள்ள அருவருப்பை விளைவிக்கும் விஷயங்கள் உன் புத்தியைப் பேதிக்காமல் இருக்கட்டும். அவைகளைப்பற்றி உபேக்ஷயாகவிரு. இதுதான் முதல் சாதநம்.

10. இரண்டாவது வைராக்கியம். உலகில் மாறி மாறிக்கொண்டிருக்கும் பல ஆசைகள் உன்னைப் பற்றுகின்றன. அதனால் உன் மநம் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறிக்கொண்டேயிருக்கும். அவ்வாசைகளை ஒருமுகப்படுத்து; அதாவது, ஈசுவர சங்கற்பத்திற்கு முரணாமல் அவைகள் நிகழவேண்டுமென்று சித்தமாயிரு. உன்னுடைய எண்ணங்கள், ஆசைகள் பலவாறாகப் பெருகி, பல விஷயங்களை நாடிக்கொண்டிருக்கின்றமையால், ஸ்திரமான வஸ்துவினிடத்தில் நிற்க இயலா. இந்நிலையான மநஸ் ஞாநமுறைக்குப் பொருத்தமன்று. ஆசைகளை அறுக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை; ஆனால் அவைகளைத் தூய்மைப்படுத்தவேண்டும். கீழான விஷயங்களில் பிரவேசிக்கும் சிந்தனையைத் தடுத்து மேலான விஷயங்களில் பிரவேசிக்கும்படி மாற்று. சுயலாபம் கருதி ஒரு காரியத்தைச் செய்யத் துணிவாய். அதை மாற்றிக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பிறர் நலம் பயக்கத்தக்கதாகவும், கடைமுறையில் எல்லாம் பிறர் நலம் பயப்ப

தாகவே முடியும்படிக்கும் செய். அன்பு, அல்லது மகப்பற்று என்பது ஈசுவரசம்பத்து; கீழ்க்கடையிலுள்ளதைச் சிறுகச்சிறுகத் தூய்மைப் படுத்தி அந்த ஈசுவர சம்பத்து பூர்ணமாகும்படி செய்துகொள் வாய். ஒருவனிடம் கீழான விஷயங்களைப்பற்றிய ஆசை, அதாவது அன்பு இருக்குமாகில், அவ்வன்பை முற்றும் அறுத்து விட முயலாதே. அஃது உயர்ந்த விஷயத்தைப்பற்றி நிகழும்படியாக அதை நேர்மைப்படுத்து. ரஸாயந சாஸ்திரத்தில் கீழான லோஹங் களைப் பொன்னாக மாற்றுவது போல், தீய விஷயத்திலும், கீழான விஷயங்களிலும், உலக விஷயங்களிலுமுள்ள பற்றுக்களைச் சிறுகச் சிறுகப் படிப்படியாய்த் தூய்மைப்படுத்தி உயர்நலமுள்ளனவாக மாற்றவேண்டும். இது தான் ஞாநமுறையின் நேர்மையான கதி. இப்படிச் செய்தால் கீழான ஆசை தூய்மை பெற்று உயர்நல மமைந்த அன்பாக மாறி ஈசுவர தேஜஸால் ஜ்வலிக்கும். இந்நிலை பெறவேண்டின், மனிதனுடைய ஸ்வாபாவிகமான ஆசைகளை முற்றும் அறுத்து மேலேறலாமென்று சிலர் பிதற்றும் வார்த்தை களை மதிக்காதே. ஈசுவர நிலை பெறுதல் என்றால் ஜீவாத்மாவை வெறுத்தலன்று, தொலைத்தலன்று; ஜீவாத்மாவைப் பரமாத்மாவா கச் செய்வித்தலாம். நாம் தேவர்களாவோமானால், மனிதநிலை யைத் துறந்தோமல்லோம். மனிதநிலை உள்ளடங்கிய விசாலமான பிரக்ஞையுள்ள தேவாம்சம் பெறுதலாம். இதுதான் இரண்டாம் சாத்கம்.

11. மூன்றாவது ஷட்ஸம்பத்தி. சுருக்கமாக, இதை நல்லொழுக் கமென்பார். சந்மார்க்கத்திற்புகுகிறவன் இவ்வாறு சம்பத்துக்களையுந் தன்னிடம் அமையும்படி செய்யவேண்டும். (1) சமம், மநோநிக் கிரஹம், மநத்தையடக்குதல். இது மிகவும் முக்கியமானது. ஆனால் இது மிகவும் கஷ்டமானது. ஒரு நாழிகை உன் மநப்போக்கைக் கவ னித்துப்பார். நீ அதன் வசமாயிருக்கிறாயென்றும், அது உன் வச மில்லையென்றும் அறிவாய். அது உன் யஜமாநனாகவும், நீ அதன் சேவகனாகவுமிருப்பதைக் காண்பாய். கீழ்க்கடையான ஆசாபாசங் களால் இழுக்கப்பட்டிருக்கும நிலையைவிட, இந்நிலை விசேஷந்தான். ஒரு விஷயத்தில் உன் மநம் நிற்கும்படியாக நீ தீர்மானம் கொள்ளு கின்றாய். சற்றுநேரம் அதில் நின்று பின்பு விலகி எண்ணாத எண்ண

மெல்லாம் எண்ணி, கொள்ளாத சிந்தனையெல்லாம் கொண்டு மநம் ஓடிக்கொண்டிருக்கத் தூங்கி விழித்தவன்போல், எங்கே போனே மென்று திகைப்புற்று மயங்குவாய். உனக்குத் துன்பமாயிருக்கும் சிந்தனையைத் தவிர்க்கவேண்டுமென்று நீ நினைப்பாய்; ஆனல் மநம் அதிலேயே சுற்றிக்கொண்டு நிற்கும்.*

அதில் சிந்தனை கொள்ளக்கூடாதென்று மநத்துக்கு ஏவல் செய்வதுபோல நீ தீர்மானங்கொள். இலக்ஷித்த விஷயத்திலிருந்து மநம்விலகினல், அப்படி விலகியதென்று உன் பிரக்ஞைக்குப் புலப்பட்டவுடன், உன் மநத்தைத் திரும்பவும் அதில் கட்டு. ஒவ்வொரு திநமும் காலையில் உலகவிஷயங்களில் பிரவிர்த்திக்குமுன் உன் மநத்தைக் குறிப்பிட்ட விஷயத்தில் நிற்கும்படியாகக் கட்டு. அவ்விஷயமாவது, கீதாசாஸ்திரத்தில் 16-வது அத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லியிருக்கும் சம்பத்துக்களில் யாதேனு மொன்றில் உன் மநம் நிகழும்படியாகச் செய். எப்படி நினைக்கிருயோ, அப்படி ஆவாய் என்பது திண்ணம். இதுவே உபநிஷத்தின் உபதேசம். அதனல் உன்னுடைய சீலத்தில் தெய்வசம்பத்து அமையவேண்டுமென்று விரும்புகிருயோ? இவ்வப்பியாஸத்தால் இரண்டு காரியத்தைச் செய்துகொள்ளுகிருய், மநத்தைச் சுவாதிநப்படுத்தல் ஒன்று, யாதேனும் ஒரு சீலத்தை உன் மநத்தில் கொள்ளுதல் மற்ருென்று. (2) தமம், இந்திரிய நிக்கிரஹம், சரீர சுவாதீநம், வாக்கையும் காயத்தையும் சுவாதீநப்படுத்தல். நாவை அடக்காமல் வாயில் வந்ததை எல்லாம் பேசுவதால் எவ்வளவு தீங்கு விளைகின்றது! பிறர் சொல்லும் வார்த்தையை யோசியாமல்

---

* அஞ்சாமை நெஞ்சுதெளி வாய்ந்தறிவாம் யோகநிலை
யெஞ்சாத தான மிசைந்ததமந்—துஞ்சாத
வெச்ச மறையுரைத்த வேலுந் தவமுயற்றி
நிச்சந் தனிற்செவ்வை நேர்ந்து.

கொல்லாமை மெய்ம்மை வெகுளாமை கோள்விடுதே
ருல்லார் சமங்குறளைச் சொல்லாமை—எல்லாத்தி
மேவுதயை தான்சலிப்பு மேவாமை மேன்மைநாண்
யாவுபொருட் சாபவந்தீர் பண்பு.

—பகவத்கீதைவெண்பா, 16-ம் அத், 1, 2 பாக்கள்.

மஹாத்மாக்களும், அவர்களையடையும் மார்க்கமும் எக

திருப்பிச் சொல்லுவதால் எவ்வளவு துன்பம் உண்டுபண்ணுகிறோம்!
பிறர் சொல்லும் வார்த்தை எம்மட்டில் வாஸ்தவமென்று ஆராயாம
லும் முன்பின் யோசியாமலும் அதை பிரஸ்தாபிப்பதினால் அநேக
தீங்குகள் விளைகின்றன. ஒருவனைப்பற்றி உரையாடும் வம்புகள் பெ
ரும்பாலும் தூஷணையுள்ளவைகளாகவே இருக்கின்றன. சுகிர்தம்பய
க்கக்கூடியனவாகவில்லை. இதனாலன்றோ தமிழ்நாட்டில் அறிஞரான
திருவள்ளுவர் " யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர்
சொல்லிழுக்குப்பட்டு " எனக் கூறினர். நாவை அடக்குகிறதற்கு,
சன்மார்க்கத்தில் நடைபெறுகிறவன், கொடூரமானதும் துவேஷமான
துமான எவ்வார்த்தையையும் உரையாடக்கூடாது. தான் அறியாமல்
பதற்றமாக ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாது. சத்துருவைப்பற்
றியுங்கூட மனம் நோகும் மொழியைச் சொல்லாமல் தவிர்க்கவேண்
டும். சன்மார்க்கம் என்பது அன்பு நிகழவேண்டிய பூமி. அதில் மனம்
நோகும் வார்த்தைகள் நடைபெற ஒண்ணாது. (3) வாக்கும் காயமும்
சுவாதீனப்பட்டால், உபரதி என்ற நல்ல சம்பத்து அமையும்.
எச்சங்கடங்கள் நேரிடினும் மனம் அதைரியப்படாமலிருத்தலும்,
அவைகளைக் கண்டு மனம் நொய்மைபெற்று வியாகூலப்படாதிருத்த
லும், கடைமுறையில் அவைகளை ஜயித்தலும், எத்தடைகளையும்
மேற்கொள்ளும் திறல்பெறுதலும், இச்சம்பத்தால் ஏற்படும்.
(4) திதீக்ஷை, பொறையுடைமை. இது, தயை தாக்ஷிண்யத்தால்
ஏற்படும் பொறுமையன்று. "ஐயா! நான் சொல்லுகிறதுதான்
சரி, ஆனால் உமது அபிப்பிராயத்தையும் வேண்டுமானால் வைத்துக்
கொள்ளுகிறது. நீர் சொல்லுகிறது தவறு என்றறிவேன். ஆனால் உம்
முடைய அபிப்பிராயத்தை மாற்ற நான் முயலவில்லை" என்ற இத்த
கைய பொறுமை, பொறுமையன்று. இது பிறரை இகழ்வதாகும்.
பிறர்க்கும் அவரவர் நோக்கப்படி நினைப்பதற்கு அதிகாரமுண்டெ
ன்று நீ சித்தாந்தம் கொள்ளுவதும் பொறுமையன்று. பிறர் மனோ
பாவத்தில் நீ பிரவேசித்தல் உன்னுடைய கடமையல்லவென்று
கனவிலும் நினைவிலும் நீ அறியவேண்டும். ஒவ்வொரு மனிதனிட
மும் உள்ள ஜீவாத்மா அந்தந்த மனிதனை உயர்நலமமைந்த லக்ஷிய
த்தை நோக்கி அபிவிருத்தி செய்விப்பதற்குத் தூண்டுகின்றமெ தனை
நீ அறிவாய். அவனவன் செல்லும் மார்க்கத்தில் நீ பிரவேசித்து

இது சரியன்று, அது சரியன்று என்று சொல்லுதற்கு நீ யார்? ஒவ்வொருவனிடமும் உள்ள புத்தியும் மனச்சாக்ஷியும் அவனவனை உயர்நலமமைந்த வழியில் நடத்தும் துணையென நீ அறியற்பாலது. உன்னிடம் உதவி வேண்டின், உதவி செய்க. செய்த உதவியைப் பிறர் விரும்பாமல் தவிர்த்தால் அதனால் மனம் நோகாதே. உன் அபிப்பிராயத்திற்கும், உன் சிந்தனைக்கும், பிறரை அடிமையாக்கவேண்டுமென்ற நினைவைத் தவிர். சந்மார்க்க முறையில் பிரவேசிக்க விரும்பும் சிஷ்யன் ஒவ்வொருவனிடமும் இருக்கவேண்டிய பொறையுடைமை இதுவாம். இஃது உலகில் நிகழும் எத்தனையோ போராட்டத்தைத் தவிர்த்துச் சமாதானத்தைப் பரவச்செய்யும். இதன் பின்னர் (5) சிரத்தை, நன்னம்பிக்கை. நீ ஈசுவரன் அம்சமென்றும், அதனால் எல்லாவற்றையும் சாதிக்கச் சக்தனென்றும், உன்னிடமுள்ள ஆத்மா தன் சங்கற்பத்தை நிறைவேற்றும் திறமையுடையதென்றும், நன்னம்பிக்கை அடைவாய். அந்தர்முகப்பட்டு ஈசுவர அம்சமுள்ளவனென்ற நம்பிக்கை பூர்ணமாக மலரும் பக்ஷத்தில், மார்க்கத்தில் எத்தகைய இடையூறுகள் நேரிடினும், எவ்விதத் தடைகள் சம்பவித்தாலும் அவைகளால் மனம் தளராமல் அவைகளைத் தாண்டுவோமென்ற உரவு, (மனத்தின் திரத்தன்மை) உண்டாகும். பின்னர் (6) ஸமாதானம், சுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் மனம் சலனம் கொள்ளாமலிருத்தல். இவை ஆறும் நற்சிலத்தை, நல்லொழுக்கத்தை உண்டுபண்ணுமியல்பின.

12. நான்காவது சாதனம் முமுக்ஷுத்வம்: ஈசுவரனுடன் கலத்தலில் அவா. இதுவரை மனிதனாக விருந்தவன் ஈசுவரனாக வேண்டுமென்பதில் பூர்ணமான இச்சை, மனிதனின் உண்மையான லக்ஷியத்தைத் தெளிவுற உணர்தலும் அதைச் சாக்ஷாத்கரித்தலில் தீவிர அவாவுமாம்.

13. ஒருவன் இச்சாதனங்களைத் தன்னிடம் அமையப் பெறுவானாகில், அவை பூர்ணமாய் இல்லாமற் போயினும் இச்சாதனங்களின் லக்ஷணம் அவனிடம் காணப்படுமாகில், தீக்ஷை பெறுதலுக்கு அருஹனாவான். குருவானவர் ஞான தீக்ஷைவாயிலில் அவனைச் சேர்ப்பிப்பார். வாயிலைத் தட்டும் முன் அது திறக்கும்.

14. தீக்ஷை என்றால் என்ன? பிரக்ஞை அகன்று நூதந லோகாநுபவத்தைப் பெறும்படியாக மலர்தலாம். அப்போது நூதந லோகஆராய்ச்சி உன்னுடைய சக்திக்குள்ளடங்கும். மனிதன் தூயனாகிப் பிரக்ஞாநம் விரிந்து விசாலம் பெற, ஸ்தூலப் பிரபஞ்சத்தைப் போல சூக்ஷ்மப்பிரபஞ்சத்தின் உண்மையும் தன்னுடைய சுவாதீநத்துக்குள்வரும். மனிதனின் பிரக்ஞாபூமியானது மேன்மேலும் விசாலம் பெற்று முன் விவரந்தெரியாமல் அலைந்து திரிந்து தேடிக்கொண்டிருந்த விஷயங்களை இப்போது தெளிவாய் அறிகிறான். மஹாத்மா என்ற உயர்பதவியை யடையும் முன் நான்கு தீக்ஷைகளுள்ளன.

15. முன் ஸாதநசதுஷ்டயம் பெற்று சம்பந்நனாகி முதல் தீக்ஷை பெறுகிறதற்கு அருகனாகிறானென்று சொன்னேன். இதற்குப்பிறகு அவன் தன்னைப் பூர்ணனாக ஆக்கிக்கொள்ளவேண்டிய விஷயத்தில் உழைக்க வேண்டிய உழைப்பு மிகவும் அதிகமாகவும் நீடித்ததாகவுமிருக்கிறது. முன்போல் தன்னிடமமைந்திருக்கிற தெய்வ சம்பத்தை அரைகுறையாய் வைத்துக்கொண்டிருத்தல் போதாது. அவை ஒவ்வொன்றையும் பூர்ணமாய் மலரும்படி செய்ய வேண்டும். இரண்டாவது தீக்ஷையைப் பெறப்புக்குமுன் ஒருவன் தன்னிடமுள்ள முக்குற்றங்களையும் பூர்ணமாகக் களையவேண்டும். சந்தேகம் லவலேசமும் தன்னிட மிருக்கக்கூடாது. தெரியாத விஷயத்தின் முன்னர் சந்தேகம் வேண்டாமென்பதன்று. அறியும் வரையில் சந்தேகம் என்ற நிலையானது இருக்கவேண்டியது தான். ஆனால் சில முக்கியமான விஷயங்களைப்பற்றிச் சந்தேகம் கொள்ளப் படாது. அவை மூன்று. (1) ஜந்மாந்தரத்தின் அறிவு, இது வரை சாஸ்திர ஆதாரத்தின் மேலும் மற்றவர்கள் சொல்லுகிறார்கள் என்பதினாலும் ஜந்மாந்தரம் உண்டென்று அங்கிகரித்தாய். இனி பால்யத்திலிருந்தவனே யௌவநத்திலிருக்கிறானென்றும், யௌவநத்திலிருந்தவனே வார்த்தகத்தி லிருக்கிறானென்றும், பிறர் வார்த்தையின் ஆதாரத்தின்மேல் நில்லாமல் நேராய் எவ்விதம் நீ யறிகிறாயோ, அவ்விதம் பூர்வ ஜந்மத்திலும் நீ இருந்திருக்கிறா யென்பதை உன் சொந்த ஸ்மரணையால் நீ அறியவேண்டும். தன் பூர்வத்தைத் தான் நன்றாய் அறியவேண்டும். (2) முக்கியம்

இன்னதென்றும் கௌணம் இன்னதென்றும் தெளிவாய் அறிந்து ஒழுகவேண்டும். இதைப்பற்றிய சந்தேகம் கிஞ்சித்தேனும் இருத்தல் கூடாது. சமயமுறை சம்பந்தமான பல கிரியைகள், பல ஆராதனைகள், பல கர்மங்கள் உள்ளன. ஜீவன் அபிவிருத்தி விகாச முறையில் அவைகள் சாதகமானவைகளே. அதிருஷ்டமானவைகளை யடைதலுக்கு அவைகள் சாதநங்கள் தான், பாலங்கள் போன்றவை. பாலம் வேண்டாமல் தாண்டும் இயல்பினனுன பிற்பாடு அச்சாதநங்கள் வேண்டுமென்பது அறிவீனமன்றோ? கீழ்ப்படியிலிருப்பவர்களுக்கு அவைகள் சாதநமாயிருக்கின்றமையால் அவர்களை உத்தேசித்து அவைகளை நீ இகழாமல் அவைகளின் மேல் கௌரவம் பாராட்டவேண்டுவதுதான். ஆனல் உனக்கு அவைகள் வேண்டுவனவல்ல. முன் அவைகளிடமிருந்த அபிமாநத்தாலேற்பட்ட வாசனைகளைத் தொலைக்கவேண்டும் (3) வேற்றுமை பாவத்தை விலக்க வேண்டும். நீ, நான் என்ற வேற்றுமையிருத்தல் கூடாது. இந்நிலை பெறுதல் கஷ்டமானது தான். அகன்ற பிரக்ஞை வந்தால் இது லகுவானது. அகன்ற பிரக்ஞையில் எல்லா ஜீவர்களையும் ஒருமையாவே மதித்து உரைத்தல் கூடும். ஒருவனைப் பார்த்து உன் சரீரம் வேறுதான்; உன் ஆசைகள், மநச்சங்கற்பங்கள் வேறுதான்; உன்னிடமுள்ள ஆத்மாவும் என்னிடமுள்ள ஆத்மாவும் ஒன்றே: இரண்டுக்கும் வேற்றுமையில்லை. அதனுல் இச்சரீரம், இவ்வாசைகள், மநச்சங்கற்பங்கள் உண்மையில் வேறல்ல; உன்னுடையவை போலவே என்னுடையவையுமாம். ஒரே ஆத்மா இரண்டையும் ஸ்வீகரித்துக்கொண்டு இரண்டிலும் கிரீடிக்கிறுன். தீக்ஷைபெற்ற ஞாநியானவன் பாபியினிடத்தில் இயங்கும் ஆத்மாவைத் தான் என்று எப்போது உணர்கின்றுனே அப்போது பாபியைப் புநிதனுக்குகிறுன். மேலுங்கீழும் சமமாகப் பார்க்கலாம். நமக்கு மேலானவரிடம் ஏகிபாவத்தைப் பெறுதலில் நாம் சந்தோஷமாயிருப்போம்; நமக்குக் கீழாயினேரிடம் ஏகிபாவ உணர்வு பெறுதலில் நம்மவர்களில் எத்தனைபேர் பிரியமுள்ளவர்களாயிருப்பார்கள்? பூர்ணர்களுடன் (Chirst) ஒருமையுணர்வை நாம் சாக்ஷாத்கரிக்கும் முன்னர், விடனையும் பாபியையும் கண்டு நாமே அவர்களென ஒருமைபாராட்டும் இயல்பினராகவேண்டும். இது தான் வேற்றுமைபாவம் ஒழித்தல் என்பதின் தாத்பர்யம்.

16. இம் முக்குற்றங்களையும் விலக்கிய பின்னர் அடுத்த தீக்ஷை பெறலாம். இனி குற்றங்களை விலக்கலும், குறைவை நிவிர்த்தித்தலும் என்பவையான தொழில்கள் செய்யவேண்டுவதில்லை. ஸ்தூலலோகத்துடன் நெருக்கமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கிற மூன்று லோகங்களிலும் அவைகளுக்கப்பாலுள்ள லோகங்களிலும் தொழில் புரிதலுக்குச் சாதகமாக சூக்ஷ்மமான சரீரங்களை அமைத்துக் கொள்ளல்வேண்டும். மூன்றாவதான தீக்ஷை பெறும் முன்னர் இச் சரீரங்களைப் பரிஷ்காரப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்போது தான் தடையில்லாமல் பூலோக சம்பந்தமான மற்ற லோகங்களில் போக்கு வரவு வைத்துக்கொண்டு தொழிற்படுதலும் உதவி புரிதலும் கூடும். அப்போது மூன்றும் வாயிலைத் தாண்ட அருகனுவன். அவ்வாயிலைத் தாண்டும் முன் எல்லாத் துவேஷங்களும் அறவேண்டும். விருப்பு வெறுப்பை விடவேண்டும். வேண்டுதல் வேண்டாமை இலனுகவேண்டும். தன்னிடம் ஈசுவர சாக்ஷாத்காரம் பெற்ற பின்பு தான், வேற்றுமைப்படுத்தும்மியல்பினதாகிய பிரகிருதி சம்பந்தமான இந்த லோக விஷயங்களெல்லாம் அநித்தியமானவைகளென்ற உண்மை உணர்வைப் பெறுவான்.

17. இந்நிலை பெற்று மநம் சஞ்சலமில்லாமல் இருக்கவும் மித்திரனைப்போல சத்துருவையும் ஆதரித்தலில் எவ்விதக் கல்மஷமுமில்லாமல் சந்தோஷம் பெறவும் அமையுமாகில் நான்காவதாகிய தீக்ஷையைப் பெறுதலுக்கு அருகனுகின்றுன். இனிமேல் புநர் ஜந்மம் உண்டாதல் கர்மாதீநமாய் ஏற்படாமல் தன இச்சையைப் பொருத்ததாகும். விவிலிய நூலில் கிறிஸ்து என்பவருடைய சரிதத்தில் சொல்லப்பட்டிருக்கிறவைகள் ஒரு முகமாய் நோக்குங் காலத்தில் சரித்திர வரலாறுதான். வேறொரு முகமாய் நோக்குங் காலத்தில் ஜீவாத்மாவானவன் சந்மார்க்கத்தில் புகுந்து பல தீக்ஷாப் படிகளை ஏறும் முறையை உருவகப்படுத்தியிருக்கின்றனவென்றறியலாம். கீழ்திக்கில் ஒரு நக்ஷத்திரம் குழந்தையின் சிரசில் உதயமாகிறதென்று சொல்லியிருக்கிறது. அது ஜீவாத்மா தன்னை பரமாத்மாவாக சாக்ஷாத்கரித்தலை சூசிப்பிக்கின்ற உருவகம். அதுவே முதல் தீக்ஷை. வில்லுலகிலிருந்து புருவடிவமாய் ஜீஸஸ் என்ப

வர்பால் ஒருஜ்மேபாதில் இறங்கினது; எப்போதும் அவருடன் குடிகொண்டிருந்தது என்பது இரண்டாவது தீக்ஷை. மலையில் சென்றுர், ஈசுவரனாக விளங்கினர் என்பது மூன்றும் தீக்ஷை. கால்வாரி என்னுமிடத்தில் துன்பப்பட்டு மரணமடைந்தார் என்பது நான்காந் தீக்ஷை, அதாவது, இஃது உலகபாசம் அற்றது என்பதைக் குறிக்கிறது. இறந்தபின் எழுந்தார், கிறிஸ்துவாகத் தோன்றினர் என்பது ஐந்தாம் தீக்ஷை. அதுதான் மஹாத்மாவாக ஆனர் என்பதைச் சூசிப்பிக்கின்றது. இதனல் மரணத்தை ஜயித்தார். மரண பயம் நீங்கிற்று; சுதந்தரம் பெற்றுர். உலக வாழ்வும் உலகத்தின் மரணமும் இனி அவரை பாதிக்காவாம். இத்தன்மையராகி கம்பீரமான மஹாத்மாவாக ஆகியிருக்கிறுர். உலகரக்ஷகராகவும் ஏற்பட்டிருக்கின்றுர். எல்லா துக்கமும் அநுபவித்தார்; எல்லாவற்றையும் ஜயித்தார்; எல்லா சங்கல்பத்தையும் நிறைவேற்றினர். அதனல், எல்லாருக்கும் பலிஷ்டனுக்கும் நொய்மை உள்ளவனுக்கும், அவனவன் ஸ்தானத்திலிருந்து அவனவனுக்கு பலம் கொடுக்கும் திறமையும் பெற்றுர். பாபியின் பாபத்திற்குப் பதிலாகத் தன்னுடைய பரிசுத்தமான நிலைமையை அவன்பால் வைத்தார் என்பது அர்த்தமல்ல. ஆனல் தன்னுடைய பரிசுத்தத்தால் அவனுடைய பாபத்தை நீக்கி அவனைப்புநிதனக்கினர் எனக்கொள்ளவேண்டும். அவனுடைய திய சுபாவத்தைப் பெயர்த்து நலம் பெறும்படி செய்தார்.

இது தான் மஹாபுருஷராக ஆகின்றவருடைய செயல், ஒழுக்கமுறை. மரணதர்மத்திற்கும், உலகபாசங்களுக்கும் உட்பட்டு உழன்று தபிக்கின்ற தம்முடைய சகோதரர்களை ஆதரவுடன் கைதூக்கி விடுதல் அவருடைய செயலாம். அம்மஹாபுருஷரின் நிலைமையை நீயும் அடையலாம். அவர் நடைபெற்ற மார்க்கத்தில் நீயும் நடைபெறலாம். அவர் பெற்ற பரமபுருஷார்த்தத்தை நீயும் அடையலாம். இது உன்னல் முடியாத காரியமென்று நினைக்கின்றுயோ? பலமான வார்த்தைகளென்றும் அவ்விதம் பேசுதல் அடாததென்றும் மதிக்கின்றுயோ? இப்படி நாமும் சொல்லத்தகுமோவென எண்ணுகின்றுயோ? இதில் சந்தேகம் வேண்டாம். விவிலியநூலில் கிறீஸ்து என்பாரைப்பற்றிய பிரஸ்தாபத்தில் “அநேக சகோதரர்

மஹாத்மாக்களும், அவர்களையடையும் மார்க்கமும். என

களுக்குள் அவர் ஜ்யேஷ்டர்;" கிறிஸ்து என்றால் பூர்ணம் பெற்றவர், மெய்யுணர்வடைந்தவர் என்பதாம். இது ஓர் நிலை. ஞானமுறையில் ஜீவன் விகாசம் பெற்று உயர்வற உயர்நலமமைந்த மலர்ச்சி. ஒவ்வொருவனும் கிறிஸ்து என்ற அக்குழந்தையை உடையான். அதாவது, ஒவ்வொருவனிடமும் ஈசுவரத்தன்மையுள்ள ஆத்மா பிரகாசிக்கின்றான். அவன் பூர்ணப்பிரகாசம் பெறும்படியாக ஒவ்வொரு மனிதனும் உபாதிகளை (சரீரங்களை) பரிசுத்தம் செய்துகொள்ள வேண்டும். அப்போது தான் ஒவ்வொரு மனிதனும் பூர்ணனாவான். இந்த உயர் நலமமைந்த உபதேசம் விவிலிய நூலிலும் உள்ளது. அந்தோ! கிறிஸ்தவர்கள் இதை மறந்துவிட்டார்கள்.!!

18. இதுதான் ஒவ்வொரு மனிதனும் அடையக்கூடிய புருஷார்த்தம். தன்னைத் தான் அறிதல், தானும் ஈசனும் அபேதமென்று உணர்தல். அவ்விதம் வெளிக்காட்டல். இந்த உயர்ந்த புருஷார்த்தத்தை மனிதவர்க்கம் பெறுகிறதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கிறது. நித்தியனான பரமாத்மாவினிடமிருந்து வந்தோம். பரமாத்மாவென்ற, அந்நிலையைத்தவிர அதற்குக்கீழ்ப்பட்ட லக்ஷியம் மனிதனுக்கு முன்பாக இருக்கற்பாலதன்று. முதலில் அந்த லக்ஷியத்தையறிதல்; பின்னர் லக்ஷித்த மார்க்கத்தில் பிரவேசித்தல்; மஹாத்மாக்கள் அவ்விதம் செய்திருக்கிறார்களென்று தெளிதல்; அவ்விதம் நாமும் செய்யக்கூடியதென்று தைரியம் கொள்ளுதல்; இனிமேல் ஈசனாக நாம் ஆவோமென்று துணிதல். இவ்விதமாய் மனிதனுள்ள ஒவ்வொருவனும் ஆவதற்கு சக்திகள் இருக்கின்றனவென்றறிய வேண்டும். அந்நோக்கத்தை நிறைவேற்றுகிறதற்காக உலகத்தில் நீவிர் எல்லாரும் ஜநித்திருக்கின்றீர்கள். அந்த பரமாத்மா ஒவ்வொருவனிடமும் மலருவதற்காகவே இவ்வுலகம் ஏற்பட்டுள்ளது. ஈசுவரனாதலே மனிதனுடைய பரமபுருஷார்த்தம்; அதுவே அவனது எல்லை; அதுவே அவனுடைய லக்ஷியம்; அதற்கு கீழானதன்று என அறிக.

ஓம் தத் ஸத்.

ப நா.

# ஆகாச கமநமும் அகண்டாகார விர்த்தியும்.*

உலகத்தில் இப்போது மனிதனால் ஆகாசத்தில் பறக்கும் யந்திரமும், ஆகாசக்கப்பல்களும், ஆகாசவிமானங்களும் புதிது புதிதாய் நிர்மிக்கப்பட்டு நமது உபயோகத்திற்குமவை மேன்மேலும் வந்துகொண்டிருக்கின்றன. முதலில் விளையாட்டாக இவைகள் ஏற்பட்டு இப்போது ஜநஸமூகத்தில் பெரிய கைங்கர்யங்கள் செய்கிறதற்கு அநுகூலமாகி வருகின்றன. ஆகாசகமநத்திற்கு அநுகூலமான சாதநங்களை ஆண், பெண், வாலிபர், வயோதிகர்யாவரும் எவ்விதப்பயமுமின்றிச் சாதாரணமாய் உபயோகப்படுத்திக்கொள்ளும் காலம் சமீபித்துக்கொண்டு வருகிறதென மதிக்கலாம். அவ்விதம் ஏற்படும் பக்ஷத்தில் ஜநஸமூகத்தில் நிகழும் சம்பந்தமுறைகள், போக்குவரத்து முறைகள் முற்றும் மாறிவிடும் என்பதை அறிஞர் எதிர்பார்க்கிறார்கள்.

2. பிரகிருதத்தில் பிரான்சுக்காரர்களும், ஜர்மானியர்களும் முக்கியமாய் ஆகாச கமந யந்திரங்களைச் சைந்யத்தின் ஓர் அங்கமாக அமைத்துக்கொள்ள பலவித பரீக்ஷைகள் செய்துவருகிறார்கள். இப்போது துர்க்கி தேசத்திற்கும் இத்தாலியா தேசத்திற்கும் நடைபெற்றுவரும் கடற்சண்டையில் ஆகாசக்கப்பல்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றனவென்பதைப் பத்திரிகைகள் மூலமாய் அறிகிறோம். தற்காலத்தில் மேற்கூறிய விமானங்கள் முதலியவை, பூர்ணமான அமைப்பைப் பெற்றனவாகத் தோன்றவில்லை. பரீக்ஷைக் களத்தில் தான் அவைகள் பொதுவாய் இருந்துகொண்டு வருகின்றன. ஜநஸமூகத்தில் சாதாரணமாக அவைகள் உபயோகத்திற்கு வருமாகில், அவைகளின் காரியமாக உலகத்திற்கு ஏற்படக்கூடிய பிரயோஜநங்கள் பலவென்று நாம் மதிக்கிறோம்.

3. இப்போது பூமண்டலம் பொதுவாய் மேனாட்டாருடைய ஆளுகைக்கும் செல்வாக்குக்கும் உட்பட்டிருக்கிறது. உலகத்தை இன்னும் அதிக நலம்பெறும்படி செய்ய மேனாட்டார் ஒருங்கு சேர்ந்து நினைக்கும்பக்ஷத்தில் செய்தல்கூடும். அவ்விதம் செய்வதற்கு அவர்களிடம் ஐகபத்யம் உண்டாகவேண்டுவது அவசியமாம்.

---

* அகன்ற ஞாலம்.

ஆனால் இப்போது அவர்களிடம் அந்த தர்மம் நிகழவில்லை "எங்கள் தேசத்து வியாபாரம் அதிகப்படவேண்டும், எங்கள் தேசத்து வியாபாரம் விசாலமாகவேண்டும். நாங்கள் உலகத்தில் மேன்மை பெறவேண்டும். எங்கள் ஜாதியாருக்குச் செல்வாக்கும் கீர்த்தியும் உண்டாகவேண்டும். மற்ற ஜாதியார்கள் எங்களுக்குக் கீழ்பட்டு இருத்தல்வேண்டும்." இவை போன்ற அஹங்கார மமகாரத்தன்மையுள்ள மநோபாவங்கள் மேனாட்டாரிடம் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. அவைகளின் காரியமாகப் போட்டியும் போராட்டமும்மேனாட்டினரிடம் பொதுவான தர்மமாக இப்போது இருக்கின்றன. இவைகளின் நிமித்தம் மேனாட்டில் ஒவ்வொரு தேசத்தாரும் நிலச்சைந்யத்தையும், கடற் சைந்யத்தையும் அவைகளுக்குச் சாதகமான புதிது புதிதான, கொலையந்திரங்களையும் புதிது புதிதான நீராவிக்கப்பல்களையும், ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு விருத்திசெய்து வருகிறார்கள். இவைகளில் கோடிக்கணக்கான திரவியங்களைச் செலவழித்தும் வருகின்றார்கள். ராஜாங்கத்தார்கள் இச்செலவிற்காக, வருவாயை விருத்திபண்ணும் நிமித்தம் அதிக வரியை ஏற்படுத்திக்கொண்டு வருகிறார்கள். ஜநஸமூகத்தின் க்ஷேமத்திற்கும் சௌகர்யத்திற்கும் அநுகூலமான நற்காரியங்களின் செலவு எதிர்பார்க்கிறபடி அதிகமாக இல்லை. மேல் நாட்டின் ஜாதியார்களுக்குள் நிகழும் சம்பந்த முறையானது பூனையும் சர்ப்பமும் ஒன்று மற்றொன்றை வெல்லமுடியாமலும், ஒன்று மற்றொன்றைக்கண்டு பயந்தும், ஒன்றோடொன்று சீறிக்கொண்டுமிருக்கும் நிலைமையைப் போன்றதாம்.

4. இனி ஆகாச கமநயந்திரங்கள் எல்லாச் சண்டைகளிலும் உபயோகிக்கப்படும்படியாக அவ்வளவு சாதாரணமாக அமையும் பக்ஷத்தில், ஒருவிதமாய் நோக்குவோமாகில் உலகத்திற்கே க்ஷேமக் குறைவு உண்டாகும். ஒரு ஜாதியாராவது, ஒரு தேசத்தவராவது சாவதாநமாய்ப் பயமின்றி வாழமுடியாது. எப்போதும் திகில்பட்டுக் கொண்டேயிருப்பார்கள். "வெடிகளும் குண்டுகளும் ஆகாசத்தினின்று இன்று வருமோ, நாளைக்கே வருமோ, அல்லது மற்று என்று வருமோவென்று திகில்பட்டுக் கொண்டு எல்லாஜாதியாரும்

நடைபெற வேண்டியவராக நேரும். இராமாயணத்தில் ஸ்ரீராமபிரான், மோஹநாஸ்திரத்தைப்போட்டதின்மேல் இங்குராமன், அங்குராமன், எங்குராமன் என்று அரக்கர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டு மாண்டனரன்றோ? அவ்விதமே ஜநஸமூகத்தில் பயமென்ற கொடிய எண்ணம் பரவி அமிழ்த்தும், ஆனால் பயம் என்ற பிரமை நெடுநாள் தங்காது. மற்றொருவிதமாய் நோக்குவோமாகில், இனி, சண்டையும் போராட்டமும் உலகில் இருக்கக்கூடாதென்ற விதியை ராஜாங்கத்தார்கள் தாமே ஒன்றுகூடித் தீர்மானித்து ஏற்படுத்துவார்கள். அதன் மூலமாய், சண்டை சச்சரவுகள் ஒய்வுபெறும். ஆகாச கமந யந்திரங்கள் சாதாரணமாக நடைபெறுவதாலே ஜநங்களுக்குள், "என் நாடு" "உன் நாடு" என்று வேற்றுமைப்படுத்தும் எல்லைகள் பொய்த்துப்போம். உலகத்திலுள்ள எல்லா ஜநங்களுள்ளும் சிநேகத்தன்மையாய்ப் போக்குவரத்துக்களும், வியாபார முறைகளும் இன்னும் மற்றைய சம்பந்தங்களும் அபிவிருத்தியாகிவரும். மேலும் ஆகாச கமந யந்திரங்கள் சண்டைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருங்காலத்திலேயே, ஜநஸமூகத்தில் வியாபாரங்கள் போக்குவரத்துக்கள் முறையில் சண்டையில் விட அதிகமாய் அவைகள் உபயோகப்பட்டுக்கொண்டுவரும். அதன் கார்யமாய் நாம் நினைப்புக்கொள்ளும் உலகமுழுவதும் பெரும் போராட்டமென்ற ஸம்பவம் நிகழாமலே போகும். தீமையினின்றும் நலம் பெறல் கூடுமென்பது ஈசுவர சங்கற்பமாயிருக்கின்றமையால் சண்டையினால் மேற்கண்ட கொடுமையான சம்பவங்கள் ஜநஸமூகத்தில் நிகழும் காலத்தில் அந்நிமிஷமே சண்டை பொய்த்துப்போகும்படியான நற்புத்தி ஜநங்கள் மநத்தின்கண் உதயமாகும். ஒருவருடைய சுகதுக்கங்களுக்கு மற்றவரும் ஈடுபடுவார்கள். இவர்களுள் பரஸ்பரமான போக்குவரவிற்காக, ஒரே பாஷையும் அமையும். ஜநஸமூகத்தின் மநோபாவமும் நேர்மைபடையும்; பொறுமையும் சாந்தமும் உலகில் மலியும். ஞாநாபிவிருத்தியும் உண்டாகும். ஜநஸமூகத்தில் ஸகோதரபாவமும் சிநேகமும் அமைவதுதான் தர்மமென அநுபவசித்தமாய் ஒவ்வொருவர் மநத்திலும் பதியும். எல்லாரும் ஈசுவர அம்சபூதர்களென்றும், அதனால் நேர்மையுடன் வாழ்வதே தர்மமென்ற சித்தாந்தத்தைக் கைக்கொள்

ஆகாச கமநமும் அகண்டாகார விர்த்தியும். அகலுவார்கள். "நான் வேறு," "நீவேறு" என்ற கலியின் கொடுமையும் ஒடுங்கவே சுயநலம் பாராட்டாமல் ஒவ்வொருவரும் பொதுநலம் பாராட்டுவார். அப்போது தொழில் முறையிலும் அறிவு முறையிலும் பல திறத்தவராக ஜனங்கள் இருந்தாலும் ஜனஸமூகம் முழுவதும் ஒருங்கு சேர்ந்து புருஷசூக்தத்தில் உபதேசித்திருக்கின்ற முறைப்படி ஓரே விராட் புருஷராக அமைகிறார்களெனவும் தனித் தனியாக ஒவ்வொருவரும் அவ்விராட் புருஷனுக்கு ஓரோர் அங்கத்தினரெனவும் மதித்து அம்மஹாபுருஷரான உலகத்தின்யோக க்ஷேமம் நேர்மையாக நடைபெறவேண்டுமாகில், ஒவ்வொரு அங்கத்தினரும் தம்மாலியன்ற வரை ஓரோர் நற்காரியம் செய்து முடிக்கவேண்டுமெனவும் உண்மையான தர்மசிந்தனைகள் ஜனஸமூகத்தில் பரவி நலந்தரும். "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும், நன்றே நினைமின் நமனில்லை," என்ற உயர்நலமமைந்த உபதேசம் ஜனஸமூகத்தில் சாதாரண தர்மமாக நிகழும்.

சிவராமசுப்பிரமணியன்.

---

## நன்மொழி.

### 121. ஜயம் என்பது என்ன?

(3) இழிவான ஆடையும், இலகுவான உணவும் கிடைப்பினும், எத்தேசமும், எக்காலமும், எவ்விதத் தடையும் நேரிடினும் அவைகளைத் திருப்தியாகக் கொள்ளுதலே ஜயம்.

(4) பிறரால் ஏற்படும் எவ்விதப் போராட்டத்தையும், எவ்வித நேர்மையின்மையையும், பிறர் காலமுறைதவறுதலையும், சந்தோஷத்துடன் சகிப்பாயாகில், அதுவே ஜயம்.

(5) எவ்வித அறிவின்மையும், எவ்வித அழிம்பையும், ஞானமுறையில் எவ்வித மௌட்டியத்தையும், தீயர்களின் எவ்வித போராட்டத்தையும் துன்பச்செயலையும் பொறுப்பாயாகில், அதுவே ஜயம்.

(6) நீ பேசுங்காலும், நற்றொழில் புரியுங்காலும், உன்னைப்பற்றி நினையாமலும், பிறருடைய புகழைக் கருதாமலும், பிறர் உன்னை அறியாமலே இருக்கவும் பிரியப்படுவாயாகில், அதுவே ஜயம்.

(Adyar Bulletin).

ஸ்ரீ:

# ஸ்ரீ சடகோபர் வைபவம்.*

ஸபிகர்களே!

மதுரை ப்ரம்மஞான சங்கத்தார், ஸேதுஸம்ஸ்தானத்தின் தலைநகராகிய இங்கு விஜயஞ்செய்து அரிய விஷயங்களை இவ்வூர் வாசிகளுக்கு உபதேசிப்பதற்காக அன்போடு கூடியிருக்கும் இம் மஹாசபையில், எனக்கு நியமிக்கப்பட்ட கைங்கர்யமானது, உண்மையில் எவ்வளவோ மேன்மைதங்கியதாயினும், என்னறிவினளவுக்கு அது மிகவும் மேற்பட்டதாயிருப்பது பற்றி அஞ்சுகிறேன். ப்ரம்ம ஞான ஆராய்ச்சியிலே தம் வாழ்நாளைச் செலுத்திவரும் இம்மஹா சபையோர்முன் தென்னாட்டு ஞானபரிபூர்ணரான பெரியாரொருவர் வைபவத்தைக் கூற அறிவிற் சிறிய யான் எழுந்து நிற்பது, எங்ஙனம் பொருத்தமுடைபதாகும்! ஆகாதாயினும், கனந்தங்கிய அக்ராஸனாதிபதியவர்களது ஆணையை நிறைவேற்றுவதால் பெரியோர் சொற்கடவாமையும், ஆழ்வார் வைபவத்தை ஆராய்தலுமாகிய இரண்டு பெருமை கிடைத்ததால், இம்மஹாசபைமுன் யானும் சிலகூறத் துணிந்தேன். ஆதலால், குற்றங்களைநது குணமே கொள்ளும் ஸபிகர்கள், யான் கூறுவனவற்றுக்கும் செவிசாய்க்க வேண்டுகிறேன்.

இன்று, யான் கூறுதற்குரிய விஷயமானது, என் தகுதிக்கு மேற்பட்டதாயினும், அருமை பெருமை வாய்ந்த பெரியார் ஒருவரது அற்புத வைபவமாகும். பாரதவருஷத்தின் தென்கோடியிலே நான்காம் வருணத்தில் உதித்தும், ஸ்ரீ வைஷ்ணவ தரிசனத்தை முன்பு ஸ்தாபித்த மஹத்-பிராமண சிரேஷ்டரெல்லாம் தங்கள் "குலபதி" என்றும் "பிரபந்த ஜனகூடஸ்தர்" என்றும் கொண்டு போற்றப்பட்ட பெரியார் எவரோ, விசிஷ்டாத்வைத ஸ்தாபகாசாரியரான ஸ்ரீ ராமாநுஜரை, "மாறனடி பணிந்துய்ந்தவன்" என்று கூறும்படி எவர் பரமாசாரியராய் விளங்குபவரோ, எவரைத்

* இது 1911௵ ஜூலை௴ 22௳யில் இராமநாதபுரத்தில் கூடிய மதுரை, இராமநாதபுரம்-ஜில்லாக்களிலுள்ள பிரஹ்ம க்ஞானக்கிளைச் சங்கங்களின் மஹாசபையில் மகா-ள-ள-ஸ்ரீ மு. இராகவையங்காரவர்களால் வாசிக்கப் பெற்றது.

தங்குலதெய்வமாகக்கொண்டு திருமாலடியார்கள் நித்யவழிபாடு செய்கின்றனரோ, எவர் இல்லாமல், திருமால் கோயில்களும், உத்ஸவங்களும், ஸ்ரீ வைஷ்ணவகிருக கிருத்யங்களும் சிறப்படையாவோ, எவருடைய பெருமையும் ஸ்ரீ ஸூக்திகளும் ஆஸேது ஹிமாவரை பரவி அந்யபாஷை பேசுவோர் நாக்கினையும் அலங்கரிக்கின்றனவோ அத்தகைய அவதார புருஷரது வைபவமன்றோ யான் கூறத்தொடங்குவது! திருமாலடியார்களாய்த் தென்னாட்டை உய்யக்கொண்ட மற்ற ஆழ்வார்களையும் தம் அவயவ பூதர் என்று பெரியோர் சொல்லும்படி இவ்வாழ்வார் அவதாரம் விளங்குமாயின் அவ்வைபவத்தை நாமும் அதிசயத்துடன் நோக்கத்தக்கதன்றோ? இவ்வாறு, சடகோபனையும் மற்ற ஆழ்வார்களையும், தென்னாடு உஜ்ஜீவிக்கும்படி ஸர்வேசுவரன் அநுக்கிரகித்ததைப் பெரியோர் அடியில் வருமாறு புகழ்ந்து கூறுவர்.

"ஸ்ரிய: பதியான ஸர்வேசுவரன் வேத வேதாந்தங்களாலும் மஹரிஷிகளாலும் கொண்டாடப்படும் அதிசயத்தையுடைய பரமபதத்தில், ஸ்ரீ பூமி நீளைகளோடும் உபய விபூதிக்கும் நிர்வாகனாய் எழுந்தருளியிருந்து நித்யஸூரிகளையும் முக்தர்களையும் ஆனந்திப்பித்துக்கொண்டு போகாநிற்க, "இவர்களைப்போல ஸம்ஸாரிகளும் நம்மை அநுபவித்து அவ்வநுபவத்தால் உண்டான மஹாசம்பத்தைப்பெற்று வாழுகைக்கு யோக்யத்தை உண்டாயிருக்கவும் அதனை இழந்திருப்பதே!" என்று மிகவும் நொந்து இச்சம்ஸாரிகள் இறகொடிந்த பக்ஷியைப்போலே இருக்கிறபடியைக் கண்டு, பரமதயாளுவாய் ஸகல ஆத்மாக்களுக்கும் கரணகளேபர ப்ரதானம் பண்ணியருள, இவர்களும், ஸர்வேச்வரன் தன் திருவடிகளைக் கிட்டி ஆசிரயித்தற்காகக் கொடுத்த சரீரத்தால் அவன் நினைத்தபடி செய்யாதே, ஸமிதை தறிக்கக் கொடுத்த கத்தியைக் கொண்டு பசுவின் வாலைத் தறிப்போர் போலவும், களையெடுக்கக் கொடுத்த கோலைக்கொண்டு கண்ணைக் கிளறிக்கொள்வாரைப் போலவும், சப்தாதி விஷயங்களில் மண்டிப் பிறவியென்னும் பெருங்கடலிற் புக்கு அநர்த்தப்படுகிறபடியைக் கண்டு, நல்வழிகண்டு நடக்கைக்கு ஏதுவாக "கலைகளும் வேதமும் நீதி நூலுங் கற்பமும் சொற்பொருள் தானுமற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால்

அருள் செய்து" என்றபடி தன் கிருபையால் சாஸ்திரப்ரதானம் பண்ணினவிடத்தும், அதன்படி செய்யாதே எல்லா பாபங்களுக்கும் ஹேதுவான ஆத்மாபகாரங்களைப் பண்ணிக் கர்மவசப்பட்டு உலகிற நிலையைக்கண்டு, ஆணைக்கடங்காதாரைச் சேனையைத் திரட்டி வெல்லும் ராஜாக்களைப்போல, ஸர்வேச்வர்ன் 'நாமே போய் இவர்களை வாரிப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வருவோம்' என்று ராமகிருஷ்ணாத்யவதாரமாக அவதரித்து, சாஸ்திரீய மர்யாதைகளைத் தானே அநுஷ்டித்தும் அநுஷ்டிப்பித்தும் படாதனபட்டுத் திருத்தப் பார்த்தவிடத்தும் ஆஸுரப்ரகிருதிகளாய்த் தன்னை வந்து கிட்டாதே எதிரிட்டு அதமகதிகளில் விழுகிறபடியைப் பார்த்து "விஜாதியரான நமக்கு இது ஸாத்யமன்று; இனக்குப் பார்வையிட்டு மிருகம் பிடிப்பாரைப்போல, மனுஷ்ய ஸஜாதீயரான ஆழ்வார்களைக் கொண்டே கார்யங் கொள்ளவேண்டும்" என்று அறுதியிட்டு, ஸ்ரீவத்ஸகௌஸ்துப வைஜயந்தி வனமாலைகளையும் அநந்தகருட விஷ்வக்ஸேன ப்ரப்ருதிகளையும் நோக்கி, "நீங்கள் போய் லீலாவிபூதியில் நாநா வருணங்களிலும் அவதரித்து எல்லா ஆத்மாக்களையும் உத்தரிப்பியுங்கள்" என நியமித்தருள அவர்களுந் தாமிரபர்ணி, காவேரி முதலான திராவிட தேசங்களில் தாழ்ந்தாரை உயர்த்துகைக்காக நாநா வர்ணங்களிலும் வந்தவதரிக்க, ஸர்வேச்வரனும் ஆழ்வார்களுக்கு "மயர்வற மதி நலமருளி" அவர்கள் வாயிலாக ஸர்வாதிகாரமான திராவிட வேதத்தைப் பிரகாசிப்பித்தருளினன்"

ஸர்வேச்வரன் ஆரியமக்கள் உய்யும்படி ஸ்ரீ ராமகிருஷ்ணாத்யவதாரங்களை வடநாட்டில் எடுத்தருளினாற் போல, தாழ்ந்தாரை உயர்த்த வேண்டித் தன் அம்சபூதர்களை பரதகண்டத்தின் தென் கோடியில் அவதரிக்குமாறு குறிக்கொண்டு அனுப்பினான்போலும். தென்னாட்டுக்கு இந்தப் பெருமையானது ஆழ்வார்கட்குப் பிற்காலத்திலும் ஆச்சரியகரமாக நேர்ந்தது. வடநாட்டு உதித்த ஸ்வாமி விவேகாநந்தர் வியக்கின்றபடி, "இந்தியாவில் இப்பொழுது பிரவிர்த்தித்திருக்கும் ஸர்வமதக் கொள்கைகளுக்கும் தக்ஷிணதேசமே முக்கிய காரணம் அன்றோ. அவ்வக்காலத்தில் அவதரித்து வித்

தாந்தஸ்தாபனம் பண்ணிய பெரும் பாஷ்யகாரர்களான ஸ்ரீ சங்கர, ராமானுஜ, மத்துவர்கள் அவதரித்தது இங்கன்றோ? பிராமணவர்ணமொன்றிலிருந்து, இத்தகைய மதப்ரவர்த்தகர்கள் அவ்தரித்தது தென்னாட்டின் பொதுப்பெருமையேயாயினும், அந்தண சிரேஷ்டர்களும் தம் தொழுகுலமாக வணங்கும்படி ப்ரபத்தி மார்க்க பரமாசாரியர்களான ஆழ்வார்களைப், பஞ்சம ஜாதியுட்பட நானாவருணங்களிலும் அவதரிக்குமாறு செய்த திருவருட்பெருமையானது, இத்தென்னாட்டுக்குப் பெரிதும் சிறந்தது எனலாம். மகத் பிராமணர்களுக்கு ஆசாரியராயும் அகில சாஸ்திரங்களையும் கரைகண்டவராயும், ஜாதிதர்மங்களில் சிறிது அழுத்தமுடையராயும் பிற்காலத்து விளங்கிய ஸ்ரீ வேதாந்த தேசிகன் என்ற திருநாமம் படைத்த பெரியார் பிரபாவங்கள் இங்குள்ளார் பலரும் நன்கறிந்ததே. அவர், தமக்குரிய நித்யவழிபாட்டுக்கு உகந்த ஆழ்வார், பஞ்சம குலத்தவதரித்த டாண்பெருமாள் எனில், ஸர்வேச்வரன் ஆழ்வார்களைத் தென்னாட்டில் அவதரிக்கச் செய்த காரணம் யாதாக வேண்டும்?

இவ்வாறு தென்னாடும் அதன்மூலம் எந்நாடும் வாழும்படி அவதரித்த இவ்வாழ்வார்களிலே, ஸ்ரீ சடகோபர் வைபவத்தை இன்றெடுத்துக்கொண்டதற்குக் காரணம் என்னவெனில் இவ்வாழ்வாரை "ஆத்யஸ்யந: குலபதே: வகுளாபிராமம்" என்றபடி ஸ்ரீ வைஷ்ணவ குலத்துக்கு ஆதி முதல்வராகவும், இவரருளிய பிரபந்தங்கள் நான்கையும் நான்கு வேதஸாரங்களென்றும், அவற்றுள்ளும் திருவாய்மொழி சாமவேத சாரமென்றும் மற்ற ஆழ்வார்கள் அருளிச்செயல்களை திருவாய்மொழிக்கு அங்கமான உபப்பிரம்மணங்களாகவும் கொண்டு பூர்வாசார்யர்கள் பெரிதும் போற்றும்படி இவ்வாழ்வார் வைபவம் இருத்தலாலேதான். இனி, இவ்வாழ்வார் வைபவத்தைச் சுருக்கமாகக் கூறுவேன்.

தென்பாண்டி நாட்டில், தாமிரபர்ணி என்ற பொருநையாற்றங்கரையிலே, ஸ்ரீ நகரி என்று பெயர்பெற்ற திருக்குருகூரில் பிரமாதி ௵ பௌர்ணமி வெள்ளிக்கிழமை கூடின விசாக நக்ஷத்திரம் கற்கடக லக்னத்தில் ஸ்ரீ ஸேனாபசராய் காரியார் உடைய

நங்கையார் என்ற இருவர்க்குந் திருக்குமாரராய் இவ்வாழ்வார் அவதரித்தார். இப்பெரியாருடைய முன்னோர்களை அடியில் வருமாறு குருபரம்பரைகள் கூறுகின்றன:— திருவழுதிவள நாடர் என்று ஒருவர்; அவர் குமாரர் அறந்தாங்கியார், அவர் குமாரர் சக்கரபாணியார், அவர் குமாரர் அச்சுதர், அவர்குமாரர் செந்தாமரைக்கண்ணர், அவர்க்குச் செங்கண்ணர், அவர்க்குப் போர்க்காரியார், அவர் குமாரர் காரியார், அவர் குமாரர் ஸ்ரீ சடகோபர் என்பது. இவ்வாறு, திருமாலுக்கு வழிவழியாட் செய்யுந் திருக்குலத்து உதித்தவர் நம்மாழ்வார்.

இவர்களுள், போர்க்காரியார் என்பவர், தம் புத்திரரான காரியார்க்கு, திருவண்பரிசாரத்து விளங்கிய திருவாழ்மார்பர் புத்திரியாகிய உடையநங்கையாரை மணம்புரிவிக்க அவ்விருவரும் திருக்குருகூரிலிருந்து, திருமால் கைங்கரியங்களைப் புரிந்துகொண்டு, இல்லறத்தை இனிது நடத்திவந்தார்கள்.

இவ்வாறு நடந்துவருநாளில், காரியாரும் உடையநங்கையாரும் திருவண்பரிசாரம் என்ற திருப்பதிக்குப்போய் மீண்டுவருகையில், திருக்குறுங்குடிக்குச் சென்று அங்குத் திருக்கோயில்கொண்ட நம்பியை ஸேவித்து "அடியேங்கட்கு ஒரு சந்தானந் தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, நம்பியும் 'அவ்வாறேயாம்' என்று குறிப்பித்தருளத் திருப்தர்களாய்க் குருகூருக்குத் திரும்பினார்கள். அதுமுதல் உடையநங்கையாரும் கர்ப்பவதியாக, ஸர்வேச்வரன் இந்நங்கையாரிடத்தில் விஷ்வக்ஸேனரை நம்ஆழ்வாராக அவதரிப்பித்தருளினன்.

ஆழ்வார் அவதரித்தது தொடங்கி, கண்களைவிழித்து முறுவல் செய்தலும் முலையுண்ணுதலுமின்றி, மௌனத்தோடு எழுந்தருளியிருக்கவும் வாட்டஞ்சிறிதுமில்லாமல் பரிபூர்ணராயிருக்கிறபடியை மாதா பிதாக்கள் கண்டு, எம்பெருமான்மேல் பாரத்தைச் சுமத்தி, இவ்வாழ்வார் அவதரித்த 12-ம் நாள், திருச்சங்கணித்துறையையுடைய பொருநையாற்றின் தென்கரையில் தேவர்பிரான் திருமுன்பே இவரை எடுத்துச்சென்று ஸேவிக்கப்பண்ணி, இவர்க்கு "மாறன்" என்ற திருநாமமும் சாத்தி, அங்குள்ள உறங்காப்புளி

யின் அடியிலே தொட்டிலில் வளர்த்தி, இவரைப் புத்ரன் என்றெண்ணாமல் விசேஷப்ரதிபத்திபண்ணி வணங்கி நிற்பாராயினர். ஆழ்வாரும், அப்புளியின் அடியிலே 16 வருஷகாலம் கண்களை விழியாமல் மௌநியாய்ப் பத்மாஸனத்தில் ஞானமுத்ரையோடு எழுந்தருளியிருந்தார். இதனைத் தாய்தந்தையர் கண்டு, "இவர் தம்மைப்போன்ற அதிகாரி யொருவரைக் காணாமையால் பேசாதிருக்கிறார்" என்பதறியாதே சிந்தை கலங்கி யிருந்தார்கள்.

இங்ஙனம் இங்குநிகழ, மதுரகவியார் என்ற பிராமணரான மஹாபக்தரொருவர், திவ்யதேசயாத்ரை செய்துகொண்டு அயோத்யைக்கு எழுந்தருளின அளவில். ஒருநாளிரவு தென்றிசையில் ஓர் அப்ராக்ருத திவ்ய தேஜஸைக்கண்டு "இஃது என்?" என்று திகைத்து 'ஏதேனும் கிராமம் வேகின்றதோ; அன்றிக் காட்டுத் தீயோ' என்று விசாரித்து, ஒன்றுந் தெரியவராமல் பின்னும் பலநாள் இப்படியே கண்டு "இஃது ஓர் அப்ராக்ருத தேஜஸாயிருக்கிறது! இதன் காரணத்தை ஆய்ந்தறிய வேண்டும்" என்று பகலெல்லாங் கண்வளர்ந்து இரவில் அந்த ஜோதியே குறியாக அதிவேகத்துடன் மீண்டு புண்யக்ஷேத்ரந்தோறும் சோதித்துக்கொண்டு, திருவரங்கப் பெருநகர்க்கு வர, அதற்கும் அப்பால் தென்றிசையிலே அச்சோதி காணப்பட, பின்னரும், முன்போலவே பிரயாணித்து திருக்குருகூர் வந்து தங்கி அப்பாற் பார்க்கும்போது அது காணப்படாமையால், "யான் கண்ட அத்திவ்யஜோதி இங்ஙனமே உள்ளதுபோலும்" என வியந்து அவ்வூர் முழுதும் பரபரப்புடன் அப்பக்தர் தேடிவரும்போது, ஓர் உறங்காப்புளியின் அடியிலே பதினாறு வயதுடையராய்க் கண்விழிப்பின்றிப் பத்மாஸனத்தில் ஞானமுத்ரையோ டெழுந்தருளியிருக்கும் ஆழ்வாரை அதிசயத்துடன் கண்டு, ஆநந்தபரிதராய், "இவர்க்குச் சைதந்யம் உண்டோ; காதுகேட்குமோ?" என்று அறிகைக்காக, ஓர் குண்டுக்கல்லை அவர்முன்பே திடீரென்று எடுத்துப்போட, ஆழ்வாரும் அவ்வோசையைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்களை மலர விழித்துப் பார்க்க, மதுரகவிகளும் இவர்க்கு வாக்குண்டோ, இல்லையோ, என்று அறிவதற்காக அவரை நோக்கிச் "செத்தத்தின் வயிற்றிற் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?" என்று

கேட்க, "அத்தைத்தின்று அங்கே கிடக்கும்" என்று ஆழ்வார் விடையருள, மதுரகவிகள் கேட்டு "இவர் ஸர்வஜ்ஞர்; இம்மஹானுபாவரை நாம் அநுவர்த்தித்து உஜ்ஜீவிக்க வேண்டுமென்று நினைத்து, ஆழ்வார்திருவடிகளை ஆச்ரயித்துக் கிருதார்த்தராய் ஆழ்வாரையே ஸதா அநுபவம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அவ்வளவில் ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஆழ்வார்க்கு எதிர்விழி கொடுக்கத் திருவுளம்பற்றிப் பிராட்டியுந் தானுமாய்ப் பெரியதிருவடிமேல் வந்துதோன்றி, தன்னுடைய வஸ்ரூபரூபகுண விபூதிசேஷ்டிதங்களை யெல்லாம் அநுபவிக்கும்படி ஆழ்வார்க்கு "மயர்வற மதிநலமருள", ஆழ்வாரும் அவ்வெம்பெருமானுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தையும் திவ்ய மங்கள விக்ரஹத்தையும் அநுபவித்து, அவ்வநுபவத்தாலுண்டான பிரீதி உள்ளடங்காமையால், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்ற மூன்று திவ்யப்ரபந்தங்களால் ரிக், யஜுஸ் அதர்வணம் எனும் மூன்று வேதங்களின் ஸாரார்த்தத்தையும், சரம ப்ரபந்தமான திருவாய் மொழியால் ஸாமவேத ஸாரார்த்தத்தையும் அருளிச் செய்து, மதுரகவி போல்வார், உள்ளத்தில் அறியக் கற்று வல்லராம்படி பிரதிஷ்டிப்பித்து அருளினர்.

"கண்டு கொண்டென்னைக் காரிமா றப்பிரான்
பண்டை வல்வினை பாற்றி யருளினன்"
"தேவு மற்றறி யேன்குரு கூர்நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே"

என்று மதுரகவியாழ்வாரே கூறுதல் காண்க.

இவ்வாறு உபய விபூதியிலும் ஒப்பில்லாத தன்மையுடையராய், பால்யந்தொடங்கி எம்பெருமானுடைய குணங்களையே தாரகமாக உடையவரான இவ்வாழ்வார், அர்த்தபஞ்சகத்தையும், சரணகதி மந்திரார்த்தத்தையும் திருவாய்மொழியில் நன்றாகத் தெளியும்படி அருளிச்செய்து, 35-திருநக்ஷத்திரத்துக்குமேல் அவாவற்று வீடுபெற்றருளினர்.

இவ்வாழ்வார், சடவாயுவை நிராகரித்த தன்மையால் 'சடகோபர்' என்றும், மகிழம்பூமாலை தரித்திருந்தமையால் 'வகுளாபரணர்' என்றும் அழைக்கப் பெறுவர். இவ்வாறே 'நம்மாழ்வார்' என்ற திருநாமமும் இவர்க்குப் ப்ரஸித்தம். இப்பெயர், ஆழ்வார்களில் முக்யஸ்தரான ஏற்றம்பற்றி இவர்க்குப் பெரியோர்கள் வழங்கியதாகும்.

"நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை - என்பதவரவர்தம் ஏற்றத்தால்" என மணவாளமாமுனிகள் அருளுதலும் காண்க.

பின்பு, ஆழ்வார்க்குப் ப்ரதமசிஷ்யரான மதுரகவிகள், தம் ஆசாரிய வைபவத்தை "கண்ணிநுண் சிறுத்தாம்பினால்" என்ற திருப்பதிகத்தால் அருளிச்செய்து, அர்ச்சாவதார ரூபமாக ஆழ்வார் விக்ரஹத்தையும் பிரதிஷ்டைபண்ணி, அவர்க்கு நித்ய பக்ஷ மாஸ அயன ஸம்வத்ஸர உத்ஸவங்களை யெல்லாந் தாழ்வற நடத்திக்கொண்டு வருவாராயினர். அங்ஙனம் மஹோத்ஸவங்கள் நிகழ்ந்துவரும்போது "வேதந்தமிழ் செய்த பெருமாள் வந்தார், திருவாய்மொழிப் பெருமாள் வந்தார், திருவழுதிவளநாடர் வந்தார், காரிமாறர் வந்தார், பராங்குசன் வந்தார்" என்று பல திருச்சின்னங்கள் பணிமாறிவருங்கால், அதுகேட்டு மதுரைச்சங்கத்தார் சிஷ்யர் சிலர் வந்து எங்கள் சங்கத்தாரோடு தர்க்கித்து ஜயித்துச் சங்கப்பலகை ஏறினாலொழிய "வேதந் தமிழ் செய்த பெருமாள்" என்று விருதுபிடிக்க வொட்டோம் என்று தடுக்க ஸ்ரீ மதுரகவிகள் "அது நியாயமேயாம்; எங்கள் ஆழ்வார் எங்கும் எழுந்தருளார்; அவர் திவ்யஸூக்திக்குச் சங்கப்பலகை இடங்கொடுத்ததாகில் அவர்க்கும் இடங்கொடுத்ததாம்" என்று சொல்லி, ஒரு சிறுமுறியிலே "கண்ணன் கழலிணை" என்ற பாசுரத்தை எழுதி அம்முறியைச் சங்கப்பலகையின்மேலே வைக்க, அக்காலத்தே, தென்மதுரையிலே, 300 தமிழ்ப்புலவர் பலகைவீற்றிருக்க, அப்பலகை அவரெல்லாரையுங் கவிழ்த்துப்போட்டு, ஆழ்வார் பாசுரம் வரைந்த சிறுமுறி யொன்றையுமே தரித்துக்கொண்டு நின்றது.

(இன்னும் வரும்.)

மு இராகவன்.

# உதயதிசை நக்ஷத்திரத்தின் சங்கம்.

## The Order of the Rising Star in the East.

"உலகத்தில் தருமத்திற்குக் குறைவும் அதர்மத்திற்கு ஏற்றமும் வரும்போதெல்லாம் நான் என்னைப் படைத்துக்கொள்ளுகிறேன். நல்லோரைப் பாதுகாத்தற்கும், தீயன செய்வோரை முற்ற ஒழித்தற்கும், தருமத்தை நன்கு நாட்டுதற்கும் நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்," என்பதாக பகவான் கீதையில் அருளியிருக்கிறார். அத்திருவாக்கை அநுசரித்து, இக்காலநிலையை அறிவுடனே ஆராய்ந்து பார்க்கில், ஒரு மஹாபுருஷன் குருவாக அவதாரமாவர் என்பதாக அறிஞர்களிற் சிலர் சொல்லுகின்றார்கள். அம்மஹாபுருஷனது நல்வரவை பக்தி விசுவாஸத்துடனே எதிர்கொண்டு அங்கீகரிக்கவும், விரும்பவும் வேண்டுமென்ற கருத்துடனே சென்ற ஜனவரி மீ 11உயில் 'உதய சூரிய சங்கம்' என்று பெயருள்ள ஒரு சங்கம் திவ்விய க்ஷேத்திரமாகிய காசிநகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அச்சங்கத்தின் பெயர் "உதய திசை நக்ஷத்திரத்தின் சங்கம்" என மாற்றப்பட்டிருக்கிறது. இப்போது நடைபெற்றுவருகின்ற இந்திய புத்திரர்களின் சங்கத்தைப்போலவே அதன் கருத்தும் பொதுஜந கைங்கரியம் புரிதலுக்காக இருப்பினும், அச்சங்கத்தைவிட, இந்தப்புதிய சங்கத்தின் நோக்கங்களும் லக்ஷ்யங்களும் இன்னும் விபக்தமாகவும் தெளிவாகவும் இருக்கின்றன. ஒரு மஹாகுரு சமீபகாலத்தில் வெளிவரப்போகின்றார் என்பதைப் பிரசித்தப்படுத்தவும், அவர் வருங்கால், அவர் நல்வரவை ஜநங்கள் ஆதரவுடனே அங்கீகரிக்க நேர்மையானபடி ஜநங்களை ஆயத்தம் செய்யவும், ஜநசமூகத்தில் அன்புப், தயையும் மேன்மேலே பரவச்செய்யவும் இச்சங்கம் ஏற்பட்டுள்ளது,

இச்சங்கத்தின் அங்கத்தினர்களின் கொள்கைகளாவன:—

1. உலக க்ஷேமத்தின் பொருட்டு ஒரு மஹாகுருவானவர் சமீபகாலத்தில் அவதரிப்பார் என்ற நன்னம்பிக்கையுடன் அவர் வெளிப்படுங்கால் அவரை அத்தன்மையான குருவென அறியும் மநமாண்புடையராயிருத்தலும்,

2. அவரை எப்போதும் தம் மநத்திற் சிந்தனை கொள்ளுதலும், செய்யும் எக்கருமத்தையும் அவர் கைங்கரியமாகச்செய்தலும்,

3. தினந்தோறும் அவர் அவர் லௌகிக காரியங்கள் செய்து வருவதில், ஒரு சமயத்திலாவது அக்குருவின் வரவைநோக்கிய யத்நங்களுள் யாதேனும் ஒன்றைச் செய்ய முயலுதலும்,

4. பக்தியும், மந உறுதியும், சாந்தமும், தங்களுடைய சீலத்தில் முக்கியமான அம்சங்களாய் அமையும்படி முயற்சித்தலும்,

5. தாங்கள் அம்மஹாபுருஷனின் பொருட்டு நடத்த முயலும்' ஒவ்வொரு காரியத்திலும், அவருடைய அருள்வெள்ளம் இறங்கும்படியாகத் தினந்தோறும் முதலிலும் முடிவிலும், பிரார்த்தனை செய்தலும்,

6. எவரிடத்திலும் நலம் தோன்றினால், அதை அறிதலும் ஆதரவு 'செய்தலும், நன்குமதித்தலும், வணங்குதலும், ஞாந முறையில், நம்மின் மிக்கார் மூத்தோர் உபதேசிக்கும் விதிகளைத் தலைமேற்கொண்டு நம்மால் கூடியவரை நடத்தலு மிவைபோன்ற பிறவுமாம்

இச்சங்கத்தில் யாரும் அங்கத்தினராகச் சேரலாம். இச்சங்கத்தின் ரக்ஷகர்கள் மாதஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையும் ஸ்ரீமாந் லெட்பீடர் அவர்களுமாவர். இச்சங்கத்தின் தலைவர் ஸ்ரீமாந் கிருஷ்ண மூர்த்தியவர்களாவர். இச்சங்கம் உலக முழுமையும் பரவிக்கொண்டு வருகிறது. இந்தியா தேசத்திற்கு இச்சங்கத்தின் கார்யதர்சிகள்:

(1) ஸ்ரீமாந் ப. கெ. டிலங்கு, M. A., Professor, C. H. C, College, Benares City.

(2) ஸ்ரீமாந் ராய் இக்பால், நாராயணன் கர்டு, M.A., L.L.B. ஞாந, கேகை, காசிப்பட்டணம்.

(3) ஸ்ரீமாந் Don Fabrizio Ruspoli, Head-quarters, T. S. Adyar, Madras.

சங்கத்தில் சேர விரும்புவோர் மேற்கண்ட கார்யதர்சிகளில் யாரேனும் ஒருவருக்கு எழுதிக்கொள்ளலாம்.

ப. நாராயணன்.

4

## நாம் தூங்குவானேன்?

இக்கேள்விக்குப் பலவிதமான விடைகள் பல புத்திமான்கள் கொடுக்கிறார்கள். மூளையின் களைப்பு, சரீரத்தின் ஓய்வு, சில விஷ திரவியங்கள் சரீரத்தில் உண்டாதல், இவைபோன்ற பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. தூக்கத்திற்கு சாக்ஷாத்தான காரணமாக இவைகளில்ஒன்றேனும் ஏற்படுகிறதில்லை. இவைகளைத் துணைக் காரணங்களாக, அல்லது தூக்கம் சம்பவிக்கிற காலத்தில் உடன் நிகழ்வனவாகமாத்திரம் சொல்லலாமேதவிர, நேரான காரணமாகச் சொல்லமுடியாதென்று இக்காலத்து பாரிஸ் நகரத்தில் ஒரு அறிஞர் சொல்லுகின்றார். தூக்கமானது சரீரத்தைக் காப்பாற்றும்முறையில் இயற்கையான இன்றியமையாத தர்மமாம். அண்டத்திற்குள்ள தர்மம் பிண்டத்திற்குமுண்டு. வெளிப்பிரபஞ்சத்தில் பிரளயம், மந்வந்தரம், தக்ஷிணாயநம், உத்தராயணம், கிருஷ்ணபக்ஷம், சுக்ல பக்ஷம், இராப்பகல் இருக்கின்றமைபோல, ஒவ்வொரு ஜீவ சரீரத்தில் தூக்கம், விழிப்பு என்ற தர்மம் நிகழ்கின்றது. உச்வாசம் இருந்தால், நிச்வாஸம் உண்டு. அப்படியே வீக்கம் (விழிப்பு) இருந்தால் தூக்கம் உண்டு. முற்றும் தூக்கத்தைத் தவிர்த்தல் முடியாது. ஆனால் அதை அதிகப்படுத்தலும், குறைவுபடுத்தலும் கூடும். தூக்கம் என்ற தர்மமானது ஜங்கமங்களான பிராணிகளிடத்தில் மாத்திர மில்லாமல், ஸ்தாவரங்களான ஓஷதிகளிலுமுண்டு. வெளிப் படையாய், புளி, கொன்றை முதலிய சில மரங்களில் காணலாம் இக்காரணம்பற்றியே உறங்காப்புளியென்ற அற்புதமான ஓர் மரம் மதுரைக்குச் சமீபத்திலுள்ள கள்ளழகர் கோவிலில் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். ஜீவராசிகளெல்லாம் தொழிற்படவும் ஓயவும் இவ்விதமாய் மாறிமாறிக்கொண்டு ஜீவிக்கின்றனவேயல்லாமல் ஓரே தொடர்பாய் இடையறாமல் தொழிற்படுதல் முடியாவாம். உதாரணமாக, மேனாட்டு பூததத்துவசாஸ்திரி (Physicist) ஒருவர் மின்சாரவிளக்கால் (Electric light) செடிகளை த்வரிதமாய் வளரும்படியும் த்வரிதமாயும் ஏராளமாயும் காய்கனிகள் உண்டாகும்படியும் இராப்பகலாய் மின்சார சக்தியைப் புகட்டிப் பரீக்ஷித்தார். அதனால் பலன் ஏராளமாய் உண்டாயினும் அச்செடிகள் சிலநாளைக்குப் பிறகு உணவு எடுத்துக்கொள்ளாமல் வளர்ச்சி நிற்கவே மரணமடைந்தன. ஜீவஹானி த்வரிதத்தில் ஏற்பட்டது. ஒவ்வொரு

ஜீவராசியினிடமும், ஜீவகாலத்தின் அளவும் அதன் சக்தியும் அதற்கேற்ப வரையறுத்து ஈசுவரனால் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வித ஜீவசக்தியானது நியதமாய் முறைப்படுத்தி உபயோகிக்கப்பட்டு வருமாகில் நீண்டகாலம் ஜீவதசை நிகழும். முறையின்றியும் த்வரிதமாயும் உபயோகப்படுத்தப்பட்டு வருமாகில் ஜீவதசை குறைவுபடும். இதை நமதுதேசத்தில் யோகிகள் நன்குணர்ந்திருக்கிறார்கள். இந்த தத்துவமே, பிராணாயாமமென்ற முறையின் இரகஸ்யமாம். ஒரு சரீரம் எடுத்தால், அச்சரீரத்திற்கு அழிவுண்டுதான். பிராணாயாமத்தை அப்பியஸிப்பதினால் ஆயுளை நீடித்திருக்கும்படி செய்துகொள்ளலாம்.

2. ஜீவிதத்திற்கு ஆதாரம் சரீரத்தின்கண் சுத்த ரத்தத்தின் ஓட்டமாம். சரீரத்திலுள்ள பல யந்திரங்கள், சரீர யாத்திரையின் நிமித்தம் பலவாறாகத் தொழிற்படுகின்றன. இதனால் விஷதிரவியங்கள் (Carbonic acid, அமிலவாயு முதலியவைகள்) உண்டாகின்றன. இவைகள் ரத்த ஓட்டத்தைத் தடைசெய்கின்றனவுமல்லாமல் ரத்தவீர்யத்தையும் குறைக்கின்றன. இதனால் களைப்பும் சோர்வும் உண்டாகின்றன. ஜாக்கிரதாவஸ்தைக்கு அவசியமான கருவியாயிருக்கின்ற மூளைக்கு ஆக்ஸிஜன் (Oxygen) உள்ள சுத்த ரத்தம் அதிகமாகப்போகாமல் தடைப்படுகின்றது. அதனால் மூளையிலுள்ள சிற்றறைகளின் தொழில் குறைவுபடுகிறது. இரத்த ஓட்டப்பைகளில் ஆங்காங்கு ரத்தகதியை முறைப்படுத்துமாறு அமைக்கப்பட்டிருக்கின்ற வெள்ளை நரம்புகளின் வலிகுன்றி சோர்வுபெறுகின்றமையால் சரீரத்தின் கீழ்ப்பாகத்திலுள்ள ரத்தக்குழாய்களில் மூளைக்குப் போகும் ரத்தக்குழாயில் விட அதிக தாராளமாய் ரத்தம் ஓடுகின்றது. இக்காரணத்தால், மூளைக்குப் போகும் ரத்தம் குறைவுபடுகிறது. இதனால் மூளை சோர்வடைகிறது. உணர்வு மங்கி மறைகிறது. தூங்குங்கால், விஷதிரவியங்கள் சுவாசத்தாலும், வியர்வையினாலும், சிறு நீர்சுரத்தலினாலும் வெளியேறுகின்றன. அதனால் தேகத்திலிருக்கிற விஷதிரவியம் நீங்கி சுத்த ரத்தம் ஏற்பட நாடி நரம்புகள் வலிமைபெறுகின்றன. தூக்கம் சுருங்கிய காலத்தில் நடைபெற்ற போதிலும், கனவு முதலியவைகளில்லாமல்

அது நடைபெறுமாகில், அதன் பிரயோஜநத்தைப் பெறலாம். சாதாரணமாய் நோயற்றவன் 6மணி முதல் 8மணிவரை உள்ளகாலம் தூங்கவேண்டுமென்பார் சிலர்.

3. மற்றும் சிலர் சொல்லுகிறதாவது:—தூக்கம் வேறு, விசிராந்திவேறு. இரண்டும் ஒன்று என மதிமயங்கி, தூக்கமின்றேல், விசிராந்தி இல்லாமற் போமே என்று வியஸநிக்கிறோம். தூக்கமில்லாமற போனாலும், விசிராந்தி உண்டு. ஒய்வு உண்டு. அநேகர் 8 மணி நேரம் நமக்குத் தூக்கம் வேண்டுமென நினைக்கிறார்கள். இது தப்பானது. தூக்கம் என்பது இயற்கையாய் ஏற்பட்டுள்ளது. பசி உண்டாகிறபோது உண்ணவேண்டும். அவ்விதம் தூக்கமயக்கம் உண்டாகிறபோது தூங்கவேண்டும். விழித்தல் சிரமமின்றி சுபாவமாக இருந்தால், தூக்கம் கூடாது. எல்லாருக்கும் ஒரே கால அளவையான தூக்கம் முதலியன வேண்டாமென்றும், ஒருவனுக்கே வயது பேதத்தினால் தூக்கம் முதலியன வேறுபடுகின்றனவென்றும் அறிவோம். நெப்போலியன் முதலிய வீரர்கள், 4 மணி நேரம் தான் தூங்கினார்கள். டெயிலர் என்ற பாதிரியார் 3 மணி நேரம் போதும் என்றார். ஹெல்ம் ஹோல்ட்ஸ்(Helm holtz) என்ற ஜர்மானிய தேசத்துதத்துவ சாஸ்திரியாரின் அபிப்பிராயப்படி புத்திநுட்பத்தால் வரவர செயற்கையான பிரகாசம்(Artificial Light) அதிகமாகவே, ஜநங்கள் அதிக தூக்கத்தை வேண்டார். 2 மணி நேரம் தூக்கம் போதுமானதாக ஏற்படும். அர்ச்சுனனைப்போன்ற சிலர், வேண்டும்போது தூக்கத்தை உண்டுபண்ணியும், வேண்டாமென்ற போது தவிர்த்தும் கொள்ளுவார். அதனால் குடாகேசன் என்ற பெயர் அர்ச்சுனனுக்கு ஏற்பட்டது. கண் மூடியும், கர்மேந்திரியங்களைச் சலநமில்லாமல் ஒய்வு பெறும்படி செய்தும், யாதேனும் ஒரு விஷயத்தை, அல்லது ஒரு நாமத்தை ஸ்மரித்துக்கொண்டும் மநம் ஒருநிலை பெறுமாகில், தூக்கம் வரும். இவ்வாறு தூங்கினால் போதுமானது.

4. அதிகமாய் மூளைவேலைசெய்யப் பெறுகின்றவர்களுக்குப் படுத்தவுடன் தூக்கம் வராது. அவர்கள் தூக்கத்தை விரும்பி அலைகிறவர்கள் போல் அங்குமிங்கும் புரளுவார்கள். இவர்கள் நன்றாய்த்

தூங்குங்காலம் 2 அல்லது 3 மணி நேரந்தானிருக்கும். ஆனால் அதை விரும்பி அதைப்பற்றிச் செலவழிக்குங் காலம் 10 மணியாக விருந்தாலும் உண்மையில் உறங்கும் காலம் 2 மணி போக, பாக்கி 8 மணி தூக்கத்தை அழைக்குங் காலமாயும் கனவு காணுங்காலமாயும் முடியும். இரவின் முற்பாதியில் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் படுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அது சரீரத்திற்கு நலம் தரும்.* பிற்பாதியில் 4 மணிக்குப் பிற்பாடு தூங்குதல் தேகத்திற்கு அவ்வளவு நலமின்றாம். 4 மணிக்குப் பிறகு ஏற்படுங்காலம் ஞான அபிவிருத்திக்குரிய பயிற்சி செய்தற்கு அநுகூலமான காலம். 3 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 4 மணிக்கு அல்லது 4½ மணிக்கு தாமே விழித்துக்கொள்ளுகின்றன. "வைகறைத்துயிலெழு" என்ற ஔவையார் வசநம் இங்கு கவனிக்கத்தக்கது. உஷக்காலத்தில் தூங்காது விழித்தலே நலமாம். விழித்த பிறகு சரீரத்திற்கு அடிமையாகி அது தூங்கும்படி வருந்த அதற்கு இடங்கொடுப்போமாகில் சிற்சில சமயம் நல்ல தூக்கமும் வரும். ஆனால் அது சரீரத்திற்குக் கெடுதியை உண்டுபண்ணும். விழித்தபின்னரும் சரீரம் விசேஷ சோர்வையும் சோம்பலையும் அடையும். பக்ஷிகள் முதலியன சூர்யோதயத்தின் முன்னரே எழுந்து பலவித கானங்கள் செய்கின்றன. காலையில் சூரியோதயத்தில் படுக்கையை விட்டெழ வேண்டியே நமது நாட்டில் முற்காலம் முதற்கொண்டு அதிகாலையில் சங்கீதம் செய்வதுண்டு. மாணிக்கவாசகரது அடியில் வரும் பாசுரம் இங்கு கவனிக்கத்தக்கது.

கூவின பூங்குயில் கூவின கோழி;
குருகுகள் இயம்பின, இயம்பின சங்கம்;
ஓவின தாரகை, ஒளி ஒளி உதயத்
தொருப்படுகின்றது, விருப்பொடு நமக்குத்
தேவநற்செறிகழற் றாளிணை காட்டாய்!
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!

ப. நா.

---

## புத்தக வரவு.

**இந்திய மாயாவிநோதக் கதைகள்:**—இது, திருவல்லிக்கேணியிலிருக்கும் மாதர் மனோரஞ்சனி பத்திராசிரியர் மகா-௱-௱-ஸ்ரீ வி. எஸ். இராமசுவாமி ஐயர் அவர்கள் எழுதிய ஒரு சிறிய கதைப்புத்தகம். இஃது எளிய தமிழ் நடையில் சிறுவர்களுக்குப் பயன்படுமாறு நன்ருய் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை 4 அணுத்தான்.

இதன்கண் ஸ்திரீகளின் கற்புநிலையின் உயர்வும், அதைக் காப்பாற்று முறையில், அவர்களின் புத்திநுட்பமும் சூசனையும், நன்ருய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. புஸ்தகம் வேண்டுவோர் மேற்படியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

**சுதர்மகலாவதீயம்:**-இஃது ஒரு நவீன தமிழ்நாடகம். இது மதுரைத்தமிழ்ச்சங்கம் பிரஸிடெண்டு, பிரஹ்மஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியஐயர் அவர்களால் அழகான எளிய தமிழ்வசன நடையில் எழுதப்பெற்றுள்ளது. ஸமயோசிதமாய் ஆங்காங்கு இனிய பாக்களால் இஃது அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. தமிழில் முற்காலத்தில் நாடகவியல் இருந்ததாகச்சொல்லுகிருர்கள். ஆனல் அதன் இலக்கியங்கள் இப்போது வெளிவரவில்லை. நூதனமாகத்தான் நாடகவியல் சம்பந்தமான இலக்கியங்கள் தமிழ்பாஷையில் ஏற்படவேண்டும். சமீபகாலத்தில் சிற்சில கதைகள் நாடகரூபமாக வெளிவந்திருக்கின்றன. நாடகவியல் இவ்வண்ணம் இருக்கவேண்டுவது என்பதை வழிகாட்டும் வண்ணம் பிரகிருதபுத்தகம் வெளிவந்திருத்தல் போலத்தோன்றுகிறது. ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரால் இயற்றபெற்ற நாடகங்களேயும், காளிதாசன் முதலிய ஸம்ஸ்கிருத மஹாகவிகளின் நாடகங்களேயும் நம்மவர் உதாரணமாக வைத்துக்கொண்டு, நம் தமிழ்நாட்டின் நடை, உடை, பாவனை ஒழுக்கமுறைகளேயும், இக்காலத்தின் இயல்பையும், நோக்கங்களேயும், வேண்டுதல்களேயும், அநுசரித்து நல்லநாடக இலக்கியங்களே உண்டாக்குவாராகில் மிகவும் நன்ருய் இருக்கும். அத்தகைய நாடகங்களே இயற்ற நமது தமிழ்ச்சங்கத்தலைவர் வடமொழி, தென்மொழி, ஆங்கிலம், என்ற மூன்று பாஷைகளிலும் சங்கீதத்திலும் அகன்றபடிப்பும் ஆழ்ந்த திறலுமுள்ளவர்களாகையால், இவர்கள் காலத்தில், நாடகவியல் மேன்மேலும்விருத்தியாகிமுன்னுட்போல் இந்நாளிலும் நாடகவியல் நம்மவர் மனத்தை நலம் பெறும்படி செய்விக்கும் என மிக ஆவலுடன் எதிர்பார்க்கிருேம். இதன் விலை அணு 6.

**பதிவிரதபாரம்யம்**—மஹாபாரதத்திலுள்ளதும் பெயர்போனதுமான சாவித்திரீயின் சரித்திரத்தை நாடகரூபமாக மேற்கண்ட பிரஹ்மஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் முன் 1900ளுத்தில் எழுதி பிரவித்தம் செய்தார்கள். பிரகிருத புஸ்தகம் இரண்டாம்பதிப்பு. இந்நாடகம், பதிவிரத தர்மசாஸ்திரமென்றே கருதற்பாலது. இதில் சொல் நயமும்

பொருள்நயமும் மிகவும் பிரகாசிக்கின்றன. இதன்கண் பல இடங்களில் அமைத்துள்ளபாக்கள் உயர்நலம் அமைந்தவைகள். அநேகம் திருமந்திரம் முதலிய ஞானநூல்களின் பாசுரங்கள் போல, மேற்கோளாக ஆளப்படும் தகைமையைப் பெற்றவைகளாக இருக்கின்றன. மஹாபாரதத்திலுள்ள கதையை ஆதாரமாக வைத்துக்கொண்டு, இந்நாடகம் நடைபெறினும், சிற்சில இடங்களில் கவியின் கற்பனைகளும், உபமானங்களும், படிப்போர் மனத்தை சந்தோஷிப்பிக்கும் திறமையுள்ளவைகளாக இருக்கின்றன. இப்புத்தகத்தை நமது பெண்கள் முக்கியமாக வாசிக்கவேண்டும். "கற்புநிலைமையை நமது பெண்கள் பூஷணமாகக் கொண்டு, அதனின்றும் சிறிதும் வழுவாமல், பிறந்த குலத்துக்கும், புகுந்தகுலத்துக்கும் புகழ் உண்டாகும் வண்ணம் நடப்பதற்கு" இப்புத்தகம் மிகவும் உதவிபுரியுமென்று நாம் நிச்சயமாகச் சொல்லலாம். இத்தகைய நாடகங்கள் நம் தென்னாட்டில் மலியுமாகில், நம்மவர்கள் நலம்பெறுவார்கள்; தமிழ் பாஷையின் நாடக இயலின் குறை நிவிர்த்தியாகும். இத்தன்மையான புத்தகங்களை மகா-ள-ள-ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் நமக்கு மேன்மேலும் அளிக்குமாறு, தீர்க்காயுஸையும் திடசரீரத்தையும் அவர்களுக்கு ஈசுவரன் அருளும்படி நாம் பிரார்த்திக்கிறோம்.

## சமாசாரம்.

ஸ்ரீமாந் ராக்பெல்லர்:—உலகத்தில், இவரைவிட அதிகச் செல்வவான் இல்லை. இவரை தற்காலத்தின் குபேரன் என்று சொல்லலாம். இவர் ஐக்ய மாகாணத்தில் நூயார்க்கு என்னும் பட்டணத்தில் வசிக்கிறார். கிரோஸின் எண்ணெய் வியாபாரத்தில் பணம் குவித்தவர். "The Standard Oil Co.", என்பது இவருடையது. இவருடைய ஏராளமான செல்வத்தினின்று வருஷ வருமானம் £ 12,000,000=180,000,000 ரூ. இதனின்று கணக்கிட ஒவ்வொரு நிமிஷமும் £ 23 அவருக்கு வருமானம். அவருக்கு பணம் குவிய ஆரம்பமானது முதல் £ 35,000,000=525,000,000 ரூபாய் வரை தர்மத்திற்கு உபயோகித்திருக்கிறார். அவருடைய பிரகிருதவேலை எல்லாம் எவ்விதம், தம்மிடமுள்ள ஏராளமான திரவியத்தை விநியோகம் செய்யலாம் என்பதுதான்.

---

ஆகாசமார்க்கமாய் இந்தியாவுக்கு லண்டன் நகரத்தினின்று யாத்திரை செய்தல்:--வருகிற செப்டம்பர்மாதத்தில், லண்டன் நகரத்தினின்று நம் தேசத்திற்கு ஆகாசமார்க்கமாய், குறைந்தபக்ஷம் மூன்று பெயர்கள் பறந்துவருகிறதாக பிரஸ்தாபம் ஏற்பட்டு முயற்சிகள் நடைபெறுகின்றன. அதற்காக ஒரு ஆலோசனைசபையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கும், லண்டனுக்கும் உள்ளதூரம் சுமார் 4500 மைல். ஆகாச கமநம்

செய்யும் மார்க்கத்தைக் குறிக்கப் பல இடங்களில் உயர்ந்த ஸ்தம்பங்கள் நாட்டப்போகின்றார்கள். இது ஒரு பெரிய திரத்தனமான காரியம். இஃது இடையூறின்றி நிறைவேறினால் இதினின்று வியாபார முறையில் அநேக புதிய சம்பவங்கள் உண்டாகும். என்ன என்ன புதுமைகள் இனி வருமோ நாம் அறியோம்.

---

தேங்காயினின்று வெண்ணெய் எடுத்தல்:—ஒரு ஜர்மானிய ரஸாயந சாஸ்திரியார் தேங்காய் நெய்யினின்று வெண்ணெய் உண்டுபண்ணும் நூதன முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். இப்போது பாலினின்று வெண்ணெய் எடுக்கிறோம். இனி, இப்புதிய முறையால், ஸ்தாவரமான விருக்ஷத்தினின்று வெண்ணெய் பெறுவோம். தேங்காய் வெண்ணெய் 20 நாள்வரை கெட்டுப்போகாமலிருக்கிறதாம். பாலின் வெண்ணெய்யில் விட, தேங்காய் வெண்ணெய்யில் மூன்றில் ஒருபங்கு ஜலம் குறைந்திருக்கிறதாம். இத்தேங்காய் வெண்ணெய்யை, ரணம் முதலியனவகளுக்கு தடவினால், அது அழுகிச் சலம்பிடித்துப்போகாம விருக்கும்படி செய்வதுடன் அது சீக்கிரம் ஆறும்படி செய்கின்றதாம்.

---

பருத்திச்சக்கையினின்று இப்போது கட்டடத்திற்கு உபயோகமாக உறுதியான செங்கற்களைச் செய்யும் விதத்தை ஒரு பிரான்சு தேசத்தவர் கண்டுபிடித்திருக்கிறார். நம்மவர் எப்போது, யுக்தியாய், புதிய புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கப் போகின்றார்கள்?

---

இங்கிலாண்டுக்கும் இந்தியாவிற்கும் ரயில்வண்டிமார்க்கம்:—ஜல மார்க்கமாக இப்போது லண்டன்நகருக்குப் போதலுக்குப் பதிலாக கரை மார்க்கமாகவே போகும்படியாக நம் தேசத்திலுள்ள கராச்சி பட்டணத்தினின்று பாரஸீக தேசத்தின்மூலமாய் ஒரு ரயில்வண்டிப்பாதை ஏற்படுத்துவதாக உத்தேசித்திருக்கிறார்கள். அந்த ரயில்வண்டிப்பாதை ஐரோப்பாக கண்டத்திலுள்ள முக்கியமான ரயில்பாதைகளுடன் நேரான சம்பந்தம்பெறுகின்றது. இஃது ஏற்படும் பக்ஷத்தில் பிரான்ஸ் தேசத்திலுள்ள கலேய் நகரம்வரை ஜலத்தைத் தொடாமல் நம்மவர் நிலமார்க்கமாய்ப் பிரயாணம் செய்யலாம். கலேய் நகருக்கும் லண்டன் நகரத்திற்கும் மத்தியிலுள்ள பிரிடிஷ் சானெல் சொற்ப நேரத்திற்குள் கடக்கத்தக்கது. அவ்வாய்க்காலின் அடியில் இருப்புக்குழாய்ப் பாலம் போடுவதாக முன் உத்தேசமிருந்தது. அவ்வுத்தேசம் திரும்பவும் ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவரப்பட்டு நிறைவேறுமாகில் ஜலசம்பந்தமன்றி நம்மிந்தியா தேசத்திலிருக்கிறவர்கள் லண்டன் நகருக்குப் போகலாம். ரயில்வண்டியும் இருப்புக்குழாய்ப் பாலமும் ஸ்திரப்படுமாகில் ஒரு வாரத்திற்குள் கராச்சியிலிருந்து லண்டன் நகரத்திற்குப் போகலாமென்று இஞ்சினியர்கள் மதிக்கிறார்கள்.

பத்திராதிபர்.

17. 𑌶𑌬𑍍𑌦𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌨𑌾𑌮𑌿𑌤𑌰𑍇𑌤𑌰𑌾𑌧𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍𑌸𑌙𑍍𑌕𑌰
𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌾𑌗𑌸𑌂𑌯𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌰𑍁𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 ॥

சப்தம், அர்த்தம், மநோவிர்த்தி, ஞாநம் இவைகளில் ஒன்றை மற்றென்றில் ஆரோபம் செய்வதினல், அவைகள் கலந்துபோகின்றன. அவைகளைப் பிரித்துத் தனிப்படுத்திய ஸமயத்தில் அவைகளின்மேல் ஸம்யமம் செய்தால், எல்லாப் பிராணிகளின் சப்தத்தையும் அறியும் தகைமை உண்டாகும்.

குறிப்பு:—வர்ணங்களை (அக்ஷரங்களை) ப்பார்க்க வேறுனதாகவும், ஆனல் அக்ஷரங்களால் வ்யங்க்யமாகவும் (வெளிப்படுத்தக்கூடியதாகவும்) நித்தியமாகவும், ஸூக்ஷ்மமாகவும் உள்ள சப்த நிலைமை ஒன்றுஉண்டு. அதற்கு ஸ்போடம் என்று பெயர். ஸ்போடம்=குமிழி போன்று வெடித்தல். பதஸ்போடம் என்றும், வாக்யஸ்போடம் என்றும் ஸ்போடம் இரண்டு விதம். ஒரு பதத்தைச் சொன்னவுடனே, அதன் ஞாநத்தை உண்டுபண்ணும் தன்மை பதஸ்போடமாம். அவ்விதமே வாக்யத்தின் ஞாநத்தை உண்டுபண்ணும் தன்மை வாக்யஸ்போடமாம். உதாநன் என்ற வாயுவானது மார்பு முதலிய 8 ஸ்தாநங்களுடன் சம்பந்தித்து, எல்லா அக்ஷரங்களையும் உண்டுபண்ணுகின்றது. எல்லா அக்ஷரங்களும் எல்லா அர்த்தங்களையும் கொடுக்கும் இயல்பினவாயினும் அவைகளால அமைக்கப்பெற்ற பதங்கள், வாக்யங்கள் எல்லா அர்த்தங்களையும் வெளிப்படுத்தாமல், அறிஞர்களுடைய ஸங்கேதத்தால் ஓரோர் பதமும் வாக்யமும் ஓரோர் அர்த்தத்தை மாத்திரம் கொடுக்கின்றன. அப்படி ஸங்கேதத்தினல் எற்படும் அர்த்தத்தைத் தவிர்த்து, வர்ணஸ்வரூபமான சப்தத்தில் ஸம்யமம் செய்வதினல், ஸூத்திரத்தில் கண்டபடி எல்லாப் பிராணிகளின் சப்தத்தையும், அதாவது பாஷையை அறியும் தகைமை உண்டாகும். அதாவது அந்தந்தப் பிராணிகளின் மநத்தில் உண்டாகும் அர்த்தத்துடன் சப்தத்தை அறிய இயலும். இன்ன சப்தம் இன்ன பிராணியினுடையது என்பதை சாதாரணப் பழக்கத்தில் யாரும் அறிதல் கூடும். அதற்கு யோகாப்பியாஸம் வேண்டுவதில்லை.

18. ஸம்ஸ்கார ஸாக்ஷாத்கரணாத் பூர்வஜாதிஜ்ஞாநம் ॥

ஸம்ஸ்காரத்தை ஸம்யமம் செய்வதினல் பூர்வ ஜந்மத்தின் ஞாநம் உண்டாகிறது.

குறிப்பு:—(1) ஸம்ஸ்காரம் இருவிதம். i. சில பிரகிருத அநுபவத்தால் உண்டாகின்றன. ii. சில முன்னநுபவங்களின் ஸ்மரணையால் உண்டாகின்றன.

ஒரு ஸம்ஸ்காரத்தை ஸம்யமம் செய்தலென்ருல், தேச, கால, காரணம் இவைகளுடன் சம்பந்தித்து ஸம்யமம் செய்தால் முந்திய ஜந்மத்தின் ஞாநம் உண்டாகும்.

(2) ஒரு கதை:—ஜைகீஷவ்யர் என்ற ஒரு ரிஷி இருந்தார். அவர் மஹா யோகி. பூர்வம் 10 மஹாப்பிரளயங்களில் தான் இருந்த ஜந்மங்களைத் தொடர்பாய் அறிந்தவர். ஆவட்யர் என்ற வேருெரு ரிஷி அடியில் வருமாறு அவரை வினவினர்:— "அடிக்கடி ஜநநம் எடுத்தலினல் துக்கம் ஏற்படுமே? பல மிருகங்களாகப் பிறத்தலினல் துக்கம் உண்டாயிருக்குமே? நரக வாதனைகள் என்ன? ஸ்வர்க்காநுபவங்கள் என்ன? மனிதனுகப்பிறத்தலில் துக்கம் அதிகமா, சுகம் அதிகமா?" ஜைகீஷவ்யர் அடியில் வருமாறு மறுமொழி சொன்னர்:—"எல்லாம் துக்கமாகவே இருக்கின்றன. சுகம் இல்லை" ஆனல், பிரகிருதி லயம் என்பதைச் செய்வதினல் ஏற்படும சந்தோஷமும் அந்த துக்கத்தில் சேருமோ என்று ஆவட்யர் திரும்ப வினவினர். விஷய சுகத்தை உத்தேசிக்க, இந்த பிரகிருதி லயத்தால் உண்டாகும் சந்தோஷம் உயர்வாக இருப்பினும், கைவல்யத்தை உத்தேசிக்க, இந்த சந்தோஷம் குணத்ரயங்களின் காரியமாகையால் துக்கமே. இதில் திருஷ்ணதந்து(ஆசையின் நூலான தொடர்) இருக்கின்றதே, அதுவும் நீங்கவேண்டும். அப்போதுதான் சுத்த கைவல்யம் ஏற்படும் என மறுமொழி கூறினர்.

19. ப்ரத்யயஸ்ய பரசித்தஜ்ஞாநம் ॥

விர்த்திகளை ஸம்யமம் செய்வதினல் பிறர் மநத்தில் உண்டாகும் எண்ணங்களை அறியலாம்.

குறிப்பு:— விர்த்திகளை ஸம்யமம் செய்தல் என்பது தன்னுடைய அல்லது பிறருடைய விர்த்திகளை ஸம்யமம் செய்தல் என அறியவேண்டும். மனம் திரிகுணாத்மகம். ஒவ்வொரு தனித்த மனமும் ஔபாதிக பேதம் பெறுகிறது. மனத்திற்கு ஸ்வாபாவிக பேதமில்லை. ஔபாதிக பேதம் யதார்த்தமல்ல. அதனால் மனத்தின் விர்த்திப் பிரவாஹமானது எல்லாருக்கும் ஒரே மாதிரியானது. அதனால் ஒரு விர்த்தியை ஸம்யமம் செய்வதால் எல்லாருடைய எண்ணங்களையும் அறியலாகும். அடுத்த சூத்திரம் இதைத் தெளிவு பண்ணுகிறது.

20. 𑌨 𑌚 𑌤𑌤𑍍 𑌸𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌷𑌯𑍀𑌭𑍂𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

அது (மற்றவனுடைய மநோவிர்த்தியை அறிவதானது) விஷயத்துடன் கூடியதல்ல. இவன் (ஸம்யமம் பண்ணுபவன்) விர்த்தியில் அது இன்மையால்.

குறிப்பு:—ஸம்யமம் பண்ணுபவன் மற்றவனுடைய விர்த்தியில் ஸம்யமம் செய்கிறானேயல்லாமல், அவ்விர்த்திக்குக் காரணமான விஷயத்தில் ஸம்யமம் செய்கிறானில்லை. அதனால் மற்றவனுடைய விர்த்தியின் வெளி விஷயம் ஸம்யமம் செய்கிறவனுக்கு நேரில் சாதாரணமாய்த் தெரியாது. ஆனால், அவ்விஷயத்தை அறியவேண்டுமென இச்சித்தால் மற்றவன் விர்த்தியின் மூலமாய் அவ்விஷயத்தில் ஸம்யமம் செய்தால் கூடும்.

21. 𑌕𑌾𑌯𑌰𑍂𑌪𑌸𑌂𑌯𑌮𑌾𑌤𑍍 𑌤𑌦𑍍𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍇 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌪𑍍𑌰
𑌕𑌾𑌶𑌾𑌸𑌂𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍇𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌧𑌾𑌨𑌮𑍍 ॥

ஒரு சரீரத்தின் ஸ்வரூபத்தில் ஸம்யமம் செய்தலினால், அதின் கண்ணிந்திரியத்தினால் கிரஹிக்கக்கூடிய தன்மைக்குத் தடை ஏற்படுகிறது. அதனால் பார்க்கிறவன் கண்ணுக்கும் அந்த சரீரத்திற்கும் சம்பந்தம் அற்றுப்போவதால் அச்சரீரத்திற்கு மறைவு (அந்தர்தான சக்தி) உண்டாகிறது.

குறிப்பு:—ரூபத்தை கிரஹிக்கும் சக்தியைத் தடுத்தல்: ஒரு வஸ்துவைப் பார்த்தல் என்றால், அந்த வஸ்துவினின்று ரஸ்மியின் சலனம் (Vibrations of ether) வெளிக்கிளம்பிப் போய்ப் பார்க்கும் கண்ணைத் தாக்கி, அக்கண்ணின் திரவியத்தில் ஒரு ஸம்ஸ்காரத்தை

(மாறுதலை)உண்டாக்குகிறது. அதன் காரியமாக மநத்தில் ரூபம் புலப்படுகிறது. தடுத்தல் என்றால் அந்த வஸ்துவினின்று அதன் ரஸ்மியை வெளிப்போகாமல் தடுத்தல், நிறுத்திவைத்தல்; இதனால் பார்க்கிறவன் கண் வஸ்துவைப் பார்க்காமல் போகிறது. இவ்விதமே சப்தம், ரஸம், முதலியவைகளில் ஸம்யமம் செய்தலினால், யோகி தான் பேசுகிற வார்த்தையையும், தான் அநுபவிக்கும் ரஸத்தையும் மாற்றான் அறியாதபடி செய்துகொள்ளலாம்.

22. ஸோபக்ரமம் நிருபக்ரமம் ச கர்ம தத்ஸம்யமாத-
பராந்தஜ்ஞாநமரிஷ்டேப்யோ வா ॥

(கர்மங்கள் இருவிதம்) உடனே பலனைக் கொடுக்க ஆரம்பித்தவை, வேத தாமஸத்தில் பலனைக் கொடுக்க ஆரம்பிக்கின்றவை. இவைகளில் ஸம்யமம் செய்வதினால் யோகி, மரணகாலத்தை அறிகிறான். அவ்விதமே அரிஷ்டங்களின் அறிகுறியாலும் (அம்மரணகாலம் தெரியவரும்).

குறிப்பு:—(1) பூர்வஜந்ம கர்மங்கள் இருவகை. i ஸோபக்கிரமம்=சீக்கிரத்தில் பலனைக் கொடுக்கின்றவை, நன்றாய்ப் பிழிந்த ஈரவஸ்திரம் வெய்யிலில் உலர்ந்துவிடுவதுபோல சீக்கிரத்தில் பலனைக் கொடுக்கின்றவை. ii நிருபக்கிரமம்=பிழியாத ஈரவஸ்திரம் வெய்யிலில்லாதவும் காற்றில்லாதவும், அடர்ந்த நிழலில் உலர்வதுபோல தாமஸத்தில் பலனைக் கொடுக்கின்றவை.

(2) மரண காலத்தை அறிதல் என்றால், தேசம், காரணம் முதலியவற்றையும் அறிதலாம்.

(3) அபராந்தம்=சாதாரண ஜநங்களின் மரணம். பராந்தம்=பிரஹ்மாவின் பிரளயம். தாமஸத்தில் பலனைக் கொடுக்கும் கர்மங்களைக்கூட யோகியானவன் தன் யோகபலத்தால் அநேக சரீரங்களை எடுத்துங்கூட சீக்கிரத்தில் அப்பலன் நிகழும்படி செய்துகொள்ளுகிறான். பட்டினத்தடிகள் 7½ நாட்டுச் சநி தசையின் கஷ்டங்களை 7½ நாழிகைகளில் அநுபவிக்கும்படி செய்துகொண்டமை இங்கு கவனிக்கத்தக்கது.

(4) அரிஷ்டங்கள் சம்பவங்கள் பயமுறுத்தும் தன்மையன வாக இருக்கின்றமையால் அப்பெயர் ஏற்பட்டது. இவை மூன்று விதம்:—ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம்.

ஆத்யாத்மிகம்: உதாரணமாகக் காதை மூடினால் ஒருவித சப்தம் சாதாரணமாய்க் கேட்கிறது. மரணம் சமீபித்தால், அவ்விதம் கேட்காது. கண்களின் பக்கங்களை அழுத்தினால் சாதாரணமாய்த் தோன்றும் ஜ்யோதிஸ் தோன்றாது. மரணத்திற்கு 6 மாதத்திற்கு முன்முதல் துருவநக்ஷத்திரம் தெரியாமற்போம். சாயா புருஷ தர்சநத்திலும், இந்திரதநுவிலும் அநேக விபரீதமானதோற்றங்கள் உண்டாகும். அவை மரணத்தின் அறிகுறிகளாம். பின்னும் இவை போன்றவை.

ஆதிபௌதிகம்: யமதூதர்கள் வருதல் போன்ற தோற்றம். நிஷ்காரணமாய் முன்னிறந்தவர்களின் தர்சநம்.

ஆதிதைவிகம்: ஸ்வர்க்கலோகதர்சநம். ஸித்தர்களின் காட்சி. வழக்கமாய்ப் பார்க்கும் ஒவ்வொன்றும் இந்த லோகத்தின் அநுப வத்தில் தலைகீழாய்த் தோன்றும்.

23. மைத்ர்யாதிஷு பலாநி ॥

மைத்ரீ முதலான (கருணா, முதிதா)பாவனைகளில் ஸம்யமம் செய்தால் விசேஷ சக்திகள் உண்டாகின்றன.

குறிப்பு:—முதலான என்ற பதம் கருணை, முதிதா * என்பவை களைக் குறிக்கின்றது. உபேக்ஷை என்பது இதில் சேரவில்லை. உபேக்ஷை என்பது பாபிகளுடைய நன்மை தீமைகளைக் கவனியா மல் இருத்தல். அது ‡அபாவரூபம். அதனால் உபேக்ஷை என் பது ஸமாதியில் சேரவில்லை. யோகிக்கு இந்த ஸம்யமத்தினால் மைத்ரீ முதலிய நற்சுபாவங்கள் விருத்தியடைகின்றன. மேலும், தான் சங்கற்பித்தால், பிறரிடமும், இச்சுபாவங்களை உண்டுபண்ண இயலும். ரிஷிகளின் ஆசிரமத்தைச் சுற்றி வைரியான பிராணிகள் கூட ஒன்றோடொன்று சிநேகம் பாராட்டுகின்றன என்று புரா ணங்களில் பார்க்கிறோம். அதற்குக் காரணம், ரிஷிகள் தங்களு

* முதலாம் பாதம் 33-வது சூத்திரம் பார்க்க.

டைய மைத்ரீ, கருணு, முதிதா என்ற பாவனைகளைத் தங்களைச்சுற்றி எங்கும் பரவும்படி செய்கின்றமையால் என்றறிக.

24. பலேஷு ஹஸ்திபலாதீநி ॥

எதன் பலம் வேண்டுமென்று நினைத்து அதில் ஸம்யமம் செய்யப்படுகிறதோ அந்த பலம் கிடைப்பதாகும். யானை முதலியவையின் பலம் உண்டாகும்.

குறிப்பு:—முதலியவை = கருடன், ஹநுமான், ஸிம்ஹம் என்பவையாம். மநத்திற்கு ஸ்வயமாக எல்லாவித ஸாமர்த்தியமும் இருப்பதால், இத்தகைய சக்திகள் உண்டாகின்றன.

25. ப்ரவ்ருத்த்யாலோகந்யாஸாத் ஸூக்ஷ்மவ்யவஹிதவிப்ரக்ருஷ்டஜ்ஞாநம் ॥

ஜ்யோதிஷ்மதீ என்ற பிரவிர்த்தி காலத்தில் இருக்கும் புத்தியை ஒரு வஸ்துவை நோக்கிச் செலுத்தினல், சூக்ஷ்மமான வஸ்துக்கள், மறைந்த வஸ்துக்கள், தூரத்தில் உள்ள வஸ்துக்கள் இவைகளின் ஞாநம் உண்டாகும்.

குறிப்பு:—ஜ்யோதிஷ்மதீ என்பதைப்பற்றி முதல்பாதம் 36-ம் சூத்திரத்தைப் பார்க்க. இந்த சூத்திரம் ஸூக்ஷ்ம திருஷ்டி, தூர திருஷ்டி முதலிய ஸித்திகளைப் பற்றியது.

26. புவநஜ்ஞாநம் ஸூர்யே ஸம்யமாத் ॥

சூரியனில் ஸம்யமம் செய்வதினல் புவநங்களின் ஞாநம் உண்டாகிறது.

குறிப்பு:—(1) புவநங்கள் = லோகங்கள். பவநங்கள் = ஜீவிக்கும் இடம், கிரஹங்கள் = Planets.

i. லோகங்கள் ஏழு. தெற்கேயுள்ள அவீசி முதல் வடக்கே மேருவரை பூமி. மேரு முதல் துருவ நக்ஷத்திரம் வரை அதிலடங்கிய நக்ஷத்திரங்களின் மண்டலங்கள் உள்பட புவர்லோகம்— 2. அதன்மேல் ஸுவர்லோகம்—3. இது 5 படிகள் உடையது. ஸ்வர்க்கலோகத்திற்கு மஹேந்த்ர லோகமென்றும் பெயர், பிரஜாபதியை தேவதையாகவுடைய மஹர்லோகம்—4. இது ஜ்யோதிர்மயமானது. இதற்குமேல் 3 படிகளையுடைய பிரஹ்மலோகம். அதாவது, ஜநோலோகம், தபோலோகம், ஸத்தியலோகம்.

ii அவீசிக்கு மேல் 6 வித நரகங்கள் உள்ளன: (1) மஹாகால (2) அம்பரீஷா (3) ரௌரவ (4) மஹாரௌரவ (5) காலசூத்திர (6) அந்ததாமிஸ்ர. முதலாவதான நரகம் கனமானது. அது பூமி. இரண்டாவது ஜலத்தன்மையானது. மூன்றாவது அக்நிமயமானது. நான்காவது வாயுமயமானது. ஐந்தாவது ஆகாசரூபமானது. ஆறாவது அதிக இருள் உள்ளது. ஜீவர்கள் இந்த 6 நரகங்களில் தங்களுடைய துஷ்கர்ம பலன்களை அநுபவிக்க வெகுகாலம் ஒரே ஜன்மத்தில் இருந்துகொண்டு வசிக்கிறார்கள்

iii ஷை நரகங்களுக்குக் கீழாக 7 பாதாள லோகங்கள் உள்ளன: (1) மஹாதல (2) ரஸாதல (3) அதல (4) ஸுதல (5) விதல (6) தலாதல (7) பாதள. இந்த 7 லோகங்களான த்வீபங்களுடன் கூடிய இப்பூமியானது 8-வது என்று சொல்லப்படுகிறது. மேல் ஏழு லோகங்கள், கீழ் ஏழு லோகங்கள், இவைகளில் மேலிருந்தும் கீழிருந்தும் பார்த்தால் 8-வது பூமியாம். இந்த பூமியின் மத்யபாகத்தில் மேரு மலை இருக்கிறது. * அது ஸுவர்ணமயமானது. அதின் சிகரங்கள் வெள்ளி, பச்சை, ஸ்படிகம், ஸுவர்ணம், நாநாவிதமான மணிகள் இவைகளாலானவை போல் தோன்றுகின்றன. இந்த மேரு மலைக்குத் தென்பார்சத்தில் நாவல்பழம் போன்ற உருண்டைவடிவான பூமி இருக்கின்றமையால், இப்பூமிக்கு நாவலந்தீவு (ஜம்பூத்வீபம்) என்ற பெயர் அமைந்திருக்கிறது. ஸூர்ய சலகத்தினால் இராப்பகல் என்ற காலவித்யாஸத்திற்கு இஃது உட்பட்டிருக்கிறது. மேருவுக்கு வடக்கில் 3 மலைகள் இருக்கின்றன. அவைகளுக்கு வெளுப்பு, கறுப்பான கொடுமுடிகள் உள்ளன. அந்த மூன்று பர்வதங்களின் மத்தியில் மூன்று வர்ஷங்கள் இருக்கின்றன (வர்ஷம் என்றால் கண்டம்) :— (1) ரமணகம் (2) ஹிரண்மயம் (3) உத்தரகுரு. மஹாமேருவிற்குத் தெற்கே (1) நிஷதம், (2) ஹேமகூடம் (3) ஹிமாசலம் என்ற மூன்று மலைகள் இருக்கின்றன. இம்மூன்று மலைகளை அடுத்தடுத்து அததன் சார்பில் ஒரு வர்ஷமாக 3 வர்ஷங்களிருக்கின்றன. அவையாவன: ஹரிவர்ஷம், கிம்புருஷம், பாரத வர்ஷம். மேருவிற்குக்கிழக்கே பத்ராசலம், என்ற ஒரு வர்ஷமிருக்கின்றது. மால்யவாந் என்ற மலை அதன் கிழக்கெல்லை. மேருவுக்கு

* இதுவே பூமியின் நாராசம் (Axis).

மேற்கே கேதுமாலம் என்ற வர்ஷம் கந்தமாதந பர்வதம் வரையில் விஸ்தரித்திருக்கிறது. பத்திராசலம், கேதுமாலம் என்ற வர்ஷங்களுக்கு மத்தியில் இளாவர்ஷம் என்றது இருக்கிறது. மேருவைச் சுற்றி இந்த 9 வர்ஷங்கள் இருக்கின்றன. இந்த 9 வர்ஷங்கள் அடங்கியது ஜம்பூத்வீபம். அதன் நீளம் லக்ஷயோஜந தூரம், அதன் இரண்டு மடங்கு விஸ்தாரமுள்ள லவணஸமுத்ரத்தால் அது சூழப்பெற்றிருக்கிறது. இதற்கப்பால் 6 த்வீபங்கள் இருக்கின்றன. அவைகளாவன:— சாகம், குசம், கிரௌஞ்ச, சால்மலி, பிலக்ஷ, புஷ்கர. அவைகள் முறையே கருப்பஞ்சாறு, கள்ளு, நெய், தயிர் பால், சுத்தஜலம் இவைகளாலாய ஸமுத்ரங்களினால் சூழப்பெற்றிருக்கின்றன. இந்த ஏழு த்வீபங்களும் * 50 கோடி யோஜந விஸ்தீர்ணமுள்ளதாக இருக்கின்றன. இவைகள் (இந்த பூமி உள்பட) அண்டத்தின் மத்தியில் இருக்கின்றன. இந்த 14 லோகங்கள் உள்ள இந்த அண்டமானது மினுமினுப் பூச்சியைப்போன்று மூலப்பிரகிருதியின் சூக்ஷ்மமான அவயவம். அந்த அண்டத்தில் பாதாளம் ஸமுத்ரம், பர்வதங்கள் இவைகளில் தேவர்கள் வகுப்பில் சேர்ந்த அஸுரர்கள், கந்தர்வர்கள், கிந்நரர்கள், கிம்புருஷர்கள், யக்ஷர்கள் ராக்ஷஸர்கள், பூதங்கள், பிரேதங்கள், பிசாசங்கள், அபஸ்மாரகர்கள் அப்ஸரஸ்கள், பிரஹ்மராக்ஷஸர்கள், கூஷ்மாண்டர்கள், விநாயகர்கள் இவர்கள் வாஸம் பண்ணுகிறார்கள். மற்ற இடங்களில் புண்ணியரான தேவ, மநுஷ்யர்கள் வாஸஞ்செய்கிறார்கள். மேரு பர்வதத்தில் தேவர்கள் விளையாடும் தோட்டமும் அதில் தேவர்கள் கூடும் சபாமண்டபமும் இருக்கின்றன அதன் பெயர் ஸுதர்மா. ஸுதர்சநம் என்றொரு பட்டணமிருக்கிறது. திரிதசர்கள் (மூன்று அவஸ்தைகளையுடையவர்கள்; அதாவது பால்யம், யௌவநம், கௌமாரம் என்ற மூன்று தசைகளையுடையவர்கள்), அக்நிஷ்வாத்தர்கள், யாம்யர்கள், துஷிதர்கள், அபரிநிர்மிதவசவர்த்திகள், பரிநிர்மிதவசவர்த்திகள் ஆகிய இந்த 6 தேவ ஜாதிகள் மஹேந்தரலோகத்தில் வஸிக்கிறார்கள். இதுவே ஸ்வர்க்க லோகம். இவர்கள் நினைத்த மாத்திரத்தில் கார்யங்கள் செய்கிறவர்கள்.

* இவைகளைப்பற்றி "மனிதனின் வம்சாவளியின் உண்மை" என்ற புஸ்தகத்தைப் பார்க்க.

ஸ்ரீராமஜயம்.

## ஸ்ரீமத்வால்மீகிராமாயணம்.

தமிழ்வசனம்.

திருச்சினாப்பள்ளி. எஸ். பி. ஜி. காலேஜ் லெக்சரர்,

ஸி. ஆர் ஸ்ரீநிவாஸய்யங்கார் பி ஏ.

அவர்களால் ஸுலபமான நடையில் மூலத்திற்கு ஸரியாய் மொழி பெயர்க்கப்பட்டது.

நேர்த்தியான கடிதத்தில் தெளிவான எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஏழு காண்டங்களும் ஸுமார் 3500 பக்கங்களில் 16 பாகங்களாக வெளியிடப்பட்டு, 4 வால்யூம்களாய், உயர்ந்த கலிக்கோ கில்ட் பைண்ட் செய்யப்பட்டுத் தயாராயிருக்கின்றன.

ஸெட்டின் விலை ரூ. 23—0—0. (தபால் சார்ஜ் வேறு)

### இங்கிலீஷ் வசனம்.

3 பாகங்கள் வெளியாயிருக்கின்றன. பாக்கி 13 பாகங்கள் இரண்டு மாஸத்திற்கு ஒருதரம் வெளிவரும்.

ஒவ்வொரு பாகத்தின் விலை ரூ. 1—8—0. (தபால் சார்ஜ் வேறு.)

## ஸாவித்ரீசரித்ரம்.

(பதிவ்ரதாமஹாத்ம்யம்)

ஸ்ரீமன் மஹாபாரதத்திலிருந்து, மொழிபெயர்க்கப்பட்டது. விலை அணா 4.

நெ. 27 செட்டைமால் தெரு, திருச்சினாப்பள்ளி. } G ஸ்ரீநிவாஸராகவையங்கார்.

---

## பெண் கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

இப்பத்திரிகை ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்துவதற்காகவே தோன்றிய ஒன்றாகும். இதில் ஸ்திரீகள், தாய், மனைவி, சகோதரி, புத்திரி, முதலிய பல நிலைகளில் செய்யவேண்டிய கடமைகளும் குடும்ப நிர்வாக சாஸ்திரம் வைத்தியவிஷயம், சுகாதாரவிஷயம் இவகளைப்பற்றிய விஷயங்களும், ஒழுக்கம், குணம், கல்வி முதலிய வற்றில் கீர்த்தியடைந்துள்ள தற்கால முற்கால மாதர்களின் சரித்திரங்களும் இனிய தமிழில் வெளியிடப்படும்.

இதற்குவிஷயங்கள் எழுதுபவர் முக்கியமாய் ஸ்திரீகளே யாவர்.

இப்பத்திரிகை ஒவ்வொரு குடும்ப ஸ்திரீயும், வாத்திச்சிமார்களாகப் பயிற்சிபெறும் ஒவ்வொரு ஸ்திரீயும் படிக்கவேண்டியது அவசியம்.

வருஷசந்தா ரூ 2—8—0 தனிப்பிரதி 0—4—0 மாதிரிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா லேபில் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

சகோதரி ரேவு. தாயாரம்மா,
பத்திராதிபர், பெண்கல்வி, சென்னை.

134

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவு செய்து

இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

1. தாதுபுஷ்டி மருந்து:—இதன் குணத்தை எழுதி முடியாது. அநுபவத்தால் தெரிந்து கொள்ளலாம், தாது நஷ்டம், பலஹீனம், ஆண்ல் குறிதுவளல், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவரக்ஷி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில், சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேக வெள்ளை வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களைப் போக்கும். சரீர புஷ்டி, புருஷத்தன்மை, போக சக்தி, ஜீரண சக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியை யுண்டாக்கும். நீர்த்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போக சக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்,

4. அக்கினி மாந்தத்திற்கு மருந்து:—பசியின்மை, புளித்த ஏப்பம் நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரை யில்லாமை; பித்த உபத்திரவங்களை சொஸ்தப் படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8, வி. பி செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

3. பிரமேக நிவாரணி:—எந்த காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர் தாரை எரிவு, சீழ், ரத்தம் வடிதல் முதலிய வியாதிகளை ஆண், பெண் இருதரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1. வி. பி. செலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

---

என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பரங்கிபேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்ட படியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட்ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பரங்கிபேட்டைக்கு எழுதவேண்டாம்.